சிவாஜி

இந்தியாவின் மொழிப் பிரச்னை

மொழிப்பண்பும் மக்கட்பண்பும்

பிரதமர் நேருவின் ஆராய்ச்சி.

பிரதமர் பண்டித நேரு அவர்கள் இந்தியாவின் மொழிப்பிரச்னை பற்றி விரிவான ஆராய்ச்சிக்கட்டுரையொன்று எழுதியிருக்கிறர். அதிலிருந்து சில முக்கிய பகுதிகளைக் கீழே கொடுக்கிறேம். நாட்டின் பொது மொழி பற்றியும், பிராந்திய மொழிகள் பற்றியும் தீவிரமான சர்ச்சை நடந்துவரும் இக்காலத்தில் நேருவின் கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுவனவாக இருப்பது உய்த்துணரத்தக்கது.

ஆலசியம் வேண்டும்

"இந்தியாவில், சிறப்பு வாய்ந்த நமது மாகாண பாஷைகளின் வளர்ச்சியில் நாம் அக்கறை காட்டுவது மிகவும் சரியான காரியமாகும். ஆனல் அகில இந்திய பாஷையொன்றும் நமக்கு இருக்கவேண்டும். ஆங்கில பாஷைக்கு சர்வலோக அந்தஸ்து ஏற்பட்டிருப்பதனுலும், தற்போது இந்தியாவில் பெருவாரியான மக்களுக்கு அது தெரிந்திருப்பதனுலும், நம்முடைய வருங்கால நடவடிக்கைகளில் இந்த பாஷை ஒரு முக்கியமான ஸ்தானம் வகிக்கப்போகிறதென்றே நான் நம்புகிறேன். ஆயினும், ஆங்கிலமோ வேறேதேனும் அன்னிய பாஷையோ அகில இந்திய பாஷையாக இருக்கமுடியாது. அகில இந்திய பாஷையாக இருக்கக்கூடியது ஒரே பாஷைதான். அது ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி, அல்லது வேறேதாவது பெயரில் அது வழங்கினுல் அந்தப்பாஷை. அதி முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்னையைப் பரிசீலனை செய்கையில் இந்த அடிப்படையான உண்மைகளை நாம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். அரசியல் காரணங்களைக்கொண்டோ, தற்சமயம் மனதில் ஏற்படும் விருப்பு வெறுப்புகளைக் கொண்டோ, தீர யோசிக்காமல் இது விஷயத்தில் அவசரப்பட்டுச் செய்யும் எந்த முடிவும் பாதகம் விளைவிக்கக்கூடுமென்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். ஆகவே, எத்தவிதமான கட்டுப்பாட்டிலும் சிக்கிக்கொள்ளாமல் காரியங்களை ஆற அமரச் செய்துகொண்டு போவது மிகவும் நல்லது. பாஷை என்பது ஒரு நுட்பமான கருவி. அதன் நயங்களைச் சிறந்த அறிவாளிகள் வகுத்திருக்கிருர்கள். சாமான்ய மக்களின் உபயோகத்திலே அது உரம் பெறுகிறது. அது ஒரு புஷ்பம்போல் வளருகிறது. வெளிப் பலவந்தம் அளவுக்கு மிஞ்சிப்போனுல் அது வளர்ச்சி குன்றிப்போகிறது. அல்லது தவருக முறுக்கிக்கொண்டு விடுகிறது.

விவாத சாரம்

"இந்த பாஷைப் பிரச்னை இப்பொழுது இந்தியாவில் கவனிக்கப்பட்டுவரும் முறையையும் விவாதிக்கப்பட்டுவரும் முறையையும் பார்க்க நான் பெரிதும் வருத்தமடைகிறேன். இந்த விவாதங்களில் பாண்டித்தியத்தை அதிகமாகக் காண முடியவில்லை. கலாசார ஞானமோ பினனுங் குறைவாய்த்தானிருக்கிறது. எதிர்காலத்தைப்பற்றிய கவனமோ சிந்தனையோ இல்லவேயில்லை பத்திரிகைகளில் எழுதப்படுவதையே கொஞ்சம் விஸ்தரித்துவிட்டால் அதுவே பாஷையாகிவிடும் என்று கருதப்படுகிறது. தவருண தேசிய உணர்ச்சி கொண்டவர்களோ, பாஷையை சாத்தியமான அளவுக்குக் கட்டுப்படுத்திக் குறுகியதாக ஆக்கிவிட வேண்டுமென்று கோருகின்றனர். அதை விஸ்தரிப்பதற்குச் செய்யப்படும் எந்த முயற்சியையும் இத்தகைய தேசியத்துக்கு இழைக்கப்படும் பாதகமென்று கூறிவிடுகின்றனர். மிதமிஞ்சிய சொல்லலங்காரமும், சிக்கலான நீண்ட வார்த்தைப் பிரயோகமுமே ஒரு பாஷையை அழகுபடுத்துவதாகப் பலர் கருதிவருகின்றனர். இத்தகைய பாஷையில் விறுவிறுப்பையோ கண்ணியத்தையோ காணமுடிவதில்லை. கருத்தாழம் கேவலம் மேல் போக்கான பாஷையென்ற அபிப்பிராயமே ஏற்படுகிறது. எதுகை மோனையும் சீர்தளையும் மட்டும் கவிதையாக ஆகிவிடாது. அதேபோல தெளிவற்ற கடினவார்த்தைகளைச் சேர்த்தெழுதிவிட்டால் அதுபாஷையாகிவிடாது. சகஜமாய் வழங்கும் ஆங்கில வார்த்தைகளை மொழிபெயர்க்கச் சமீபகாலத்தில் நடந்துவரும் முயற்சிகள் பெருங்கேலிக் கூத்தாகவேயிருக்கின்றன. இந்த மனப்பான்மையே நீடிக்குமானுல், கருத்தை வெளியிடுவதற்குள்ள மிக நேர்த்தியானதொரு சாதனத்தைக் கொலை செய்வதற்கே ஒப்பாகும்.

பழைய பொக்கிஷம்

"இந்தியாவின் மிகப்பெரிய பொக்கிஷம் எது, மூதாதையர் இந்தியாவுக்கு விட்டுச் சென்றிருக்கும் மாபெரும் செல்வம் எது, என்று என்னையாராவது கேட்டால், சமஸ்கிருத பாஷையும், இலக்கியமும் அவற்றில் பொதிந்துகிடக்கும் விஷயங்களுந்தான் என்று நான் தயக்கமின்றிக் கூறுவேன். இது நமக்குக் கிடைத்திருக்கும் மகோன்னதமான பிதுரார்ஜிதமாகும். இது நம்மிடையே இருந்துவரும் வரையில், இது நம்மக்களின் வாழ்க்கைக்கு வழிதுலக்கும்வரையில் இந்தியாவின் மூலாதாரமான மேதையும் இருந்துவரும். சம்ஸ்கிருதம் மிகப் பழமையானதொரு பொக்கிஷமாகப் பண்டைக்கலாசாரத்தின் உருவகமாக இன்னும் உயிரோடிருந்துவருகிறது. இவ்வளவு பழமையானதொரு பாஷை இந்த அளவுக்கு ஜீவனுேடு இருந்துவருவது மிகவும் ஆச்சரியந்தான்.

சம்ஸ்கிருத பாஷைப் பயிற்சியை வளர்க்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஆராய்ச்சிகள் நடத்தி, அனேகமாய் மறந்துபோய்க்கிடக்கும் இந்த பாஷையில் புதைந்து கிடக்கும் செல்வங்களையெல்லாம் வெளிப்படுத்தும் வேலையில் நம்முடைய பண்டிதர்களை ஈடுபடுத்த நான் விரும்புகிறேன்.

—(12-ம் பக்கம் பார்க்க)

பட்டம் துறந்தபின்

முடியரசர் பட்டம் துறப்பதும், கௌரவ மனிதர்கள் தமக்கு அணி செய்யும் கௌரவப் பட்டங்களை விடுத்துத் 'தூய்மை' அடைவதும் ஜனநாயக யுகத்தின் சலுகைமிக்க அருஞ் செயல்கள். பிரிட்டிஷ் மன்னர் "இந்தியாவின் சக்ரவர்த்தி" என்ற தமது பட்டத்தை விட்டு விட்ட சேதி நேயர்களுக்குத் தெரியும். சக்ரவர்த்திப் பட்டத்தை விட்டுக்கொடுத்த பின்னர் அவாது முத்திரை தாங்கி வரும் நாணயங்களிலும் இந்த மாறுதல் சாஸனம் பெற வேண்டுமல்லவா? இந்த மாற்றத்தைக்கொண்டு 'இந்திய சக்ரவர்த்தி' என்ற பெயரைத்துறந்து வெளிப்பட்டிருக்கும் சில பிரிட்டிஷ் நாணயங்கள்மேலே காணப்படுகின்றன.

பன்னிரண்டாம் அத்தியாயம்

புகழ் பெற்ற புரந்தர்

சிவாஜியின் செயல்கள் பீஜபுரி சுல்தானையும் அவரது ராணுவ ஆலோசகர்களையும் கூட அவ்வளவாகக் கலங்க வைக்கவில்லை— உண்மையில் அவர்கள் இது விஷயத்தில் செலுத்திய கவனம் கிட்டத்தட்ட பூஜ்யமென்றே சொல்ல வேண்டும்.

ஆனால் குரு தாதாஜி கொண்டதேவரும், அன்னையும் சிவாஜியின் செயல்களால் ரொம்பவும் அதிர்ச்சியுற்றுத்தான் இருந்தார்கள். அன்னையையும், குருவையும் சிவாஜி ஆசுவாசப்படுத்த ஏது முயற்சியும் அக்காலத்தில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அவனது கவனம் முழுவதும் ராணுவத் திட்டங்களிலேயே ஈடுபட்டிருந்தது. மேலும் பலஹீனமான உள்ளப் பான்மையுடையவருக்கு செயல்வீரர் கவனம் செலுத்துவது அபாயகரமானது என்ற கொள்கையை சிவாஜி தன் முதல் மந்திரமாகக் கைக்கொண்டிருந்தான்.

தார்ணாவும், ராஜகட்டும் முடிந்தபின்னர் புனாவுக்குத் தென்பகுதியில் புரந்தர் என்ற முக்கியமான கோட்டை ஒன்றுதான் எஞ்சியிருந்தது. அதையும் கைப்பற்றிவிட்டால் தென் வட்டத்துத் தற்காப்பு அரண் பூர்த்தியாகிவிடும். எனவே சிவாஜியின் கவனம் புரந்தர் கோட்டையின் பால் திரும்பியது.

புரந்தரும் பீஜபுரி சுல்தானது ராணுவ அதிகாரியின் ஆட்சியில்தான் இருந்துவந்தது. சமீபத்தில்தான் அந்த அதிகாரி இறந்து அவனது மூன்று மைந்தரிடையேயும் கோட்டைத் தலைமைக்கு வாரிசு உரிமைச் சச்சரவு நடந்து வந்தது.

ஆப்டோன் & லைன்
பிளாக்,
சைன் போர்ட்,
ரப்பர்ஸ்டாம்ப்
சீலடுகள்
செய்யுமிடம்
S.R. ப்ராஸஸ்
சின்னக்கம்மாளதெரு .... திருச்சி.

அந்தக் காலத்தில் தட்சிணத்தில் பிரபுத்துவ முறையான அரசாட்சியே நிலவி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அரசர்களும், சுல்தான்களும் தனிப்பட்ட சில நபர்களைப் பொறுக்கியெடுத்து அவர்களை மாகாண, பிராந்தியத் தலைவராக்கி, சுவாந்தார உரிமை கொடுத்து அந்த உரிமையைப் பாரம்பரிய முறையில் அமுல் நடத்திவந்தார்கள்.

புரந்தர் கோட்டையின் மேல் அந்த ராணுவத் தலைவனுக்கு இருந்த உரிமையும் இத்தகைய உரிமைதான். இந்த பாரம்பரிய உரிமையைக் கைப்பற்றத்தான் இறந்த தலைவனது மைந்தரிடையே சச்சரவு நடைபெற்று வந்தது. இம் மூவரும் தனித்தனியே தத்தம் தூதரை பீஜபுரிக்கு அனுப்பி தத்தமது உரிமையை ஸ்தாபிக்கத் தடுமாறி வந்தனர். லஞ்சமும், வக்காலத்துமாகக் குழம்பியிருந்த பீஜபுரி நிர்வாக இருட்டுக்குள் இந்தப் பிரச்னையும் புகுந்து வெளிவர இயலாமல் தத்தளித்துக்கொண்டிருந்தது.

ஏது முடிவும் ஏற்படாமல் காலம் கடந்துவந்தபடியால், மூவரும் ஒரே கோட்டைக்குள் தம் உயிருக்கு அஞ்சி, பரஸ்பரம் நம்பிக்கையின்றி, ஆனாலும் வெளியேறிவிட்டால் உரிமை பறிபோய் விடுமோ என்று பயந்து, வாழ வேண்டியிருந்தது.

இதைக் கவலையோடு கவனித்து வந்த சிவாஜி தனக்குள் சிரித்துக்கொண்டே ஒரு முடிவுக்கு வந்தான். "உங்கள் சச்சரவை நான் தீர்த்து வைக்கிறேனே!" என்று துணிகரமாக மூவருக்கும் தனித்தனியே ஓலையனுப்பினான்.

சாதாரணமாக இத்தகைய செயல் அதிகப்பிரசங்கித்தனமாகத்தான் கருதப்பட்டிருக்க வேண்டும். சிவாஜியின் அந்தஸ்து எங்கே, புரந்தர் கோட்டை ராணுவத் தலைமைக்கு இருக்கும் அந்தஸ்து எங்கே? இவன் யார் சமரசம் செய்து வைப்பதற்கு?

ஆனால் அந்த மூன்று சகோதரர்களும் இவ்வாறு நினைக்கவில்லை. தங்களுக்குள் இருந்த சச்சரவு ஒருவாறு தீர்ந்தால் நலம் என்ற கவலைதான் அவர்களுக்கு அதிகமாயிருந்தது. சச்சரவைத் தீர்க்க சிவாஜிக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்ற விஷயத்தை அவர்களில் யாரும் ஆலோசனை செய்ததாகத் தெரியவில்லை.

சிவாஜி "அபயம்" கொடுக்கிறேனென்று சொன்ன உடனேயே அம் மூவரும் அவனுக்கு அளித்த கௌரவம் அவனுக்கே வியப்பையும், சிரிப்பையும் ஊட்டியது.

பருவக்காற்றின் சீற்றம் ஓய்ந்து, வானம் சற்றுக் கண் திறந்த கையோடு, சோவென்ற மழையிருளின் குகையினின்று வெள்வரைக்க ஆரம்பித்த உடனே நடக்கும் வழக்கமான தீப விழாவுக்கு சிவாஜி விருந்தினனாக அழைக்கப்பட்டான். சிவாஜி சந்தர்ப்பத்தை ஆவலோடு பற்றிக் கொண்டான்.

ஏற்கனவேயே சிவாஜி வேறு திட்டங்கள்போட்டு சில காரியங்கள் சாதித்து வைத்துக் கொண்டிருந்தான். இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்னமேயே துவங்கி இந்தத் திட்டம் நிறைவேறியிருந்தது.

மழையின் ஆவேசத்துக் கெதிராகத் தற்காப்பு செய்து கொள்ளக் கீற்றால் பெரிய தடுக்குகள் கட்டப்பட்டுக் கோட்டையின் திறந்த பகுதிகள் மறைக்கப்படுவதும், அடிக்கடி இந்தத் தடுக்குகள் புதுப்பிக்கப் படுவதும் வழக்கம். கடைசி முறையாக இத் தடுக்குகள் வேயும் சமயம் வந்தபோது சிவாஜியின் வீரர் பலர் குடியானவரைப் போல் வேடம் பூண்டு தலையில் சுமை சுமையாக வைக்கோலும், கீற்றும் சுமந்து கோட்டைக்குள் புகுந்து காத்திருந்தனர். இந்தச் சுமைகளுக்குள் ஆயுதங்களைத் தயாராக ஒளித்து வைத்துக்கொண்டிருந்தனர்.

சிவாஜி விருந்தினனாக அழைக்கப்பட்டிருந்த தினத்தன்று கேளிக்கைகள் அமோகமாக இருக்கும். மது வர்க்கங்கள் ஆறாகப் பெருகியோடும். போதை வெறியில் ஆழ்ந்து திரிவர் எல்லோரும்.

சிவாஜி கோட்டைக்கு வருவதற்கு முன்னமேயே இளைய சகோதரர் இருவரும் ஒன்று சேர்ந்து சூழ்ச்சி செய்து குடி வெறியில் ஆழ்ந்திருந்த மூத்தவனைக் கயிற்றால் கட்டி ஒரு அறைக்குள் தள்ளிப் பூட்டி விட்டனர்.

சிவாஜி வரவேற்கப் பட்ட போது அவனுடன் பேச்சு வார்த்தை நடத்த இளையவர் இருவர்தான் இருந்தனர். கோட்டைக்குள் சிவாஜி நுழைந்தபோது அவ்விருவரும் போட்டியிட்டுக் கொண்டு அவனுக்குச் செய்த உபசாரம் அவனுக்கு எக்களிப்பையே உண்டாக்கியது. இருவரும் தத்தமது உரிமைதான் நியாயமானது என்று கெஞ்சலும், கொஞ்சலும் நிறைந்த தொனியில் கூத்தாடினர்.

சிவாஜி ரொம்ப சாவகாசமான முறையில் அவர்களது கட்சிகளைக் கேட்டான். அதில் ரொம்ப அக்கறை காட்டுவது போல் நடித்தான். நியாயத்துக்கு விரோதமாகத் தான் முடிவு கூற முடியாதே என்று இரக்கப்பட்டான். கடைசியில், அவசரமாக ஏது முடிவும் கூற முடியாதென்றும், மறுநாள் ஆலோசிக்கலாமென்றும் கூறிவிட்டான்.

மறுநாள் எப்போது, எங்கே சந்திக்கலாமென்பது பற்றிய சர்ச்சை நடந்தபோது சிவாஜி யோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தான். கோட்டையை அடுத்து இயற்கையின் கம்பீரமான சூழலில் ஓடிய ஆற்றில் நீந்த வர வேண்டுமென்று அவ்விருவரையும் அழைத்தான். அவர்களும் ஒப்பினர்.

மறுநாள் சிவாஜியும், அவ்விரு சகோதரரும் நதியில் ஆடினர், குளுமையும், வேகமும் நிறைந்த அந்தச் சிற்றாறு சிவாஜியின் உடலுக்கும், உள்ளத்துக்கும் தென்பு கொடுத்தது.

நதியாடி முடிந்து கோட்டைக்குத் திரும்பும்போது கண்ணை உயர்த்திப் பார்த்த அவ்விரு சகோதரும் திடுக்கிட்டுக் கல்லாய்ச் சமைந்து போயினர். சிவாஜியை அவர்கள் கோப வெறியுடன் திரும்பிப் பார்த்தபோது அவன் வதனத்தில் புன்னகைதான் மலர்ந்தது.

கோட்டையில் உச்சியின் பிறை துலங்கும் பீஜபுரிக் கொடி பறக்கவில்லை. கோட்டை வாயிலிலும், எங்கெங்கும் புதிய காவலர் காத்து நின்றனர். "இவர்களெல்லாம் எனது சேவகர்தான்" என்று சிவாஜி கூறியபோது அவ்விரு சகோதரருக்கும் எழுந்த சீற்றம் பயங்கரமாகத்தான் இருந்தது. ஆனால் அவர்களால் என்ன செய்ய முடியும்?

"இப்படி அக்ரமம் செய்யத்தானா உங்களைச் சமரசம் செய்து வைக்க அழைத்தோம்? என்ன துரோகம்!" என்று கூச்சலிட்டனர் இருவரும்.

(16-ம் பக்கம் பார்க்க.)

ஏஜன்ஸி தேவை
நம் சொந்தகைத்தறி ஸில்க் தயாரிப்பு. விற்பனையாளருக்கும், ஏஜன்ஸிகளுக்கும் 6 கெஜம் கலர் ஸில்க் ஸாரி 1க்கு ரூ. 9 வீதம் அனுப்பப்படும். 3 ஸாரிக்கு மேல் ஆர்டர் செய்தால் வி. பி. சார்ஜ் இனாம்.
JOTHI FABRICS,
Kottar Travancore.

கோடிக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்று வருவது
வீல்மார்க் சென்னீஸ் வைரங்கள்
&
விக்டரி ஸ்டார் வைரங்கள்
தயாரிப்பவர்:—
சென்னி ராதாகிருஷ்ணன்,
பெரியபஜார்,
திருச்சினப்பள்ளி.

மொழிப் பண்பு

ஒரு நாட்டாரின் குணுதிசயங்களை அதன் பாஷை காட்டுவது போல் வேறெதுவுங் காட்டாதென்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு பாஷை வன்மையும் உரமும் வாய்ந்ததாக இருந்தால், அப்பாஷையைப் பேசும் மக்களும் வன்மையும் உரமும் வாய்ந்தவர்களாக இருப்பார்கள் கருத்தாழமின்றி அலங்காரமும் சிக்கலும் நிறைந்ததாக இருந்தால் மக்களும் அப்படியே இருப்பார்கள். —பண்டித நேரு

சிவாஜி

ஆசிரியர் :—திருலோக சீதாராம்

கோட்டை 14	திருச்சி, 20—2—49 சர்வதாரி-ஞு மாசி-மீ, 9-உ	முற்றுகை 21

மொழியின் லட்சியம்

நம்மைச் சுற்றிலும் கிட்டத்தட்ட எல்லாருமேமாறிக்கொண்டிருக்கும்போது, கடினமானகட்டுப்பாடு பாஷையை உயிரற்றதாகவேசெய்துவிடும். படாடோபம் நிறைந்த பழைய காலத்து பாஷைகளில் பாராட்டத்தக்க அம்சங்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால், இந்த ஜனநாயக யுகத்துக்கு அவை கொஞ்சங்கூட ஏற்றவையல்ல; இப்போது பாமர மக்களுக்கு அறிவூட்டுவதே நம் நோக்கம். —நேரு

இந்தியர் கடலாடிய பண்டைச் சிறப்பு

சிதம்பரனுர் வீர வாழ்வு

தூத்துக்குடியில் ராஜாஜி விளக்கம்

தூத்துக்குடியில் ராஜாஜி செய்த பிரசங்கம் நம்மவர் தொன்மையையும், கடலாடிய பண்டைச் சிறப்பையும் விரிவுபெறச் சித்தரிக்கிறது. வீர சிதம்பரனுரின் தியாகத்தையும், தீரத்தையும் ஸ்வானுபூதியுடன் விளக்குகிறது. அதன் கருத்தாழமும், சரித்திர பீடிகையும் சிந்தனையைக் கிளறுகின்றன. அந்தப் பிரசங்கத்தை அப்படியே இங்கு பிரசுரித்திருக்கிறோம்.

—ஆசிரியர்.

ஐரோப்பிய நாட்டார் வருவதற்கு முன்னே பல நூற்றுண்டுகளாக, இந்திய வணிகர்கள் அரபிக்கடலையும், இந்து மகா சமுத்திரத்தையும் கடந்து, கிழக்கே சீனம் வரையிலும் மேற்கே ஆப்பிரிக்கா வரையிலும் சென்று, வெளிநாடுகளோடு வியாபாரம் நடத்தி வந்திருக்கிறுர்கள். இந்திய மக்கள் கடல் மீது துணிந்துசென்று, வெளி நாட்டு மக்களோடு தொடர்ந்து உறவு வைத்துக் கொண்டிருந்திருக்கிறுர்கள் என்பதற்கு, இந்து மகாசமுத்திரத்திலும் சமீப பசிபிக் தீரத்திலுமுள்ள தீவுகளில் காணப்படுங் கோயில்களும் அங்கு வசிக்கும் மக்களின் கலாசாரமுமே சான்ருகும். ஐரோப்பிய மாலுமிகள் கொலம்பஸ் காலம்வரையில், அதாவது கிறிஸ்துவுக்குப் பின் பதினைந்து நூற்றுண்டுவரை, கடல்மேற் செல்லத் துணியவில்லை. ஆனுல் ஹிந்துக்களோ, கிறிஸ்து சகாப்தம் தொடங்குவதற்கு முன்னமே கடற் பிரயாணம் செய்து வந்திருக்கிறுர்கள். சமீபத்திலே நமது கடற்படைத் தலைவர் வைஸ்—அட்மிரல் டபிள்யூ. ஈ. பாரி சொன்னதைத்தான் நான் திரும்பவும் எடுத்துக் கூறுகிறேன். கிறிஸ்து தோன்றுவதற்குப் பல வருஷங்களுக்கு முன்னரே, இந்தியர்கள் அரபிக் கடலைக் கடந்து சென்று எகிப்து நாட்டோடும் ரோம சாம்ராஜ்யத்தோடும் வியாபாரம் நடத்தி வந்தார்கள். இந்திய இலக்கியங்களிலும், கிரேக்க ரோம சரித்திராசிரியர்களின் நூல்களிலும் இதற்கு எவ்வளவோ அத்தாட்சி கிடக்கிறது. சரித்திர காலந் தொடங்கியபின், ஹிந்துக்கள் வங்காள விரிகுடாவையும் இந்து மகா சமுத்திரத்தையும் கடந்து சென்று, பசிபிக் தீவுகள் பலவற்றில் குடியேறியிருக்கிறுர்கள். கிறிஸ்து சகாப்தம் ஆரம்பிப்பதற்கு வெகுநாளைக்கு முன்பே ஹிந்துக்கள் சுமத்ரா, மலேயா, இந்தோனெசியா, சைனு, ஆகிய நாடுகளில் பிரவேசித்தார்கள். மௌரிய மன்னர்கள், கீழ்க் கடல் அதிபன் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டிருந்தார்கள். இன்னுஞ் சிறிது சமீப காலத்திலே பார்த்தால், இந்தியக் கப்பலொன்றில் ஒரிஸ்ஸாவிலிருந்து இலங்கைக்கும், அங்கிருந்து நிகோபார் தீவுக்கும், மலாக்கா ஜலசந்தி வழியாய்ச் சைனுவுக்கும் கடற்பிரயாணம் செய்ததை பாஹியான் வர்ணிக்கிறுர். இது கி. பி. ஐந்தாம் நூற்றுண்டிலாகும். அந்த நூற்றுண்டில்தான் நாம் மலேயாவிலும் சுமத்ரா ஜாவாவிலும் நம் ஆட்சியை ஏற்படுத்தினேம். 14-ம் நூற்றுண்டு வரையிலும், ஏதாவதொரு ஹிந்து வம்சம் இந்துமகா சமுத்திரத்தில் இப்படி ஆதிக்கம் செலுத்திவந்திருக்கிறது. அந்த நூற்றுண்டில்தான் இவ்வாதிக்கம் அராபியர் கைக்கு மாறிற்று.

ஹிந்துக்கள் கடலில் ஆதிக்கம் செலுத்திவந்த காலத்தில் கடல் மார்க்கத்திலும் கப்பலோட்டத்திலும் பரிபூரண சுதந்தரம் இருந்துவந்தது. கடற் கொள்ளைக்காரர்கள் அடக்கப்பட்டு, மார்க்கங்கள் பாதுகாக்கப்பட்டுவந்தன. தர்மத்தை மதித்து நடந்த நாம் ஏகபோக உரிமையொன்றும் கொண்டாடவில்லை. உண்மையில், 1500-ல் போர்ச்சுகீசியர் ஏக போக உரிமை கொண்டாடும் வரையில் கடல் மார்க்கங்களில் அப்படி உரிமை கொண்டாடுவதென்பதே தெரியாது. அதுவரையில், இந்தியர்களும், அராபியர்களும், கடற் போக்குவரத்துடைய இதர மக்களும், எல்லார்க்கும் பொதுவான சர்வதேசப் பாதையாகத்தான் கடலை உபயோகித்துக்கொண்டிருந்தார்கள்.

கடல் மார்க்கத்தில் போர்ச்சுகீசியர் ஏகபோக உரிமை கொண்டாடியதைக் கள்ளிக் கோட்டை ஜாமரின் பலமாக எதிர்த்தார். மூன்று கடற் போராட்டங்கள் நடந்தன; மூன்றிலும் ஜாமரின் தோல்வியுற்றதினுல் கடல் ஆதிக்கம் போர்ச்சுகீசியர் கைக்கு மாறிற்று. இது பதினுரும் நூற்றுண்டின் ஆரம்பத்திலாகும். அடுத்த நான்கு நூற்றுண்டுகளில் இந்தியாவின் விதியைத் தீர்மானிக்கும் விஷயத்தில், ப்ளாஸி முதலிய நிலப் போராட்டங்களைக் காட்டிலும் 1503 1509-ம் வருஷங்களில் நடந்த இந்தப் போராட்டங்களே முக்கியமாயிருந்தன என்று கடற்படை அதிகாரிகள் கருதுகிருர்கள்.

சிவாஜியின் காலத்தில், அவருடைய கடற்படைக்கும் மொகலாயர் கடற்படைக்கும் போராட்டங்கள் நடந்திருக்கின்றன. ஆகவே, நம் நாட்டார் கடலுக்குப் புதியவர்களல்லர். நமது வலைஞர்கள்—இளைஞரும் சிறு முதியவரும்—கடலலைகள் மீது தாவிச் செல்லும் காட்சியைக் கண்டிருப்போர் யாரும், நமது சிறுவர்கள் அந்த ஆற்றலில் இங்கிலாந்து தேசத்துச் சிறுவர்களுக்கு இளைத்தவர்களல்லர் என்பதைப்பற்றிச் சந்தேகமே கொள்ளமுடியாது. வருண பகவான் அல்லது சமுத்திர ராஜனிடம் உலகத்திலுள்ள மற்ற நாட்டாருக்கு எவ்வளவு நெருங்கிய உறவு உண்டோ அவ்வளவு உறவு நமது சிறுவர்களுக்கும் உண்டு. தற்காலம் கடற்போக்குவரத்தையும், விஞ்ஞான ரீதியான சாதனங்களையும் எடுத்துக் கொண்டால், அந்த விஷயத்திலும் நமது சிறுவர்கள் நல்ல பெயரெடுத்து வந்திருக்கிறுர்கள் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆகவே நமது ஞாபகத்திலே தோய்ந்து கிடக்கும் சிதம்பரம்பிள்ளையும் சுப்ரமண்ய பாரதியும் கண்ட கனவுகள் நமது காலத்திலேயே பூர்த்தியாவது நிச்சயம்.

சிதம்பரம் பிள்ளையிடம் சற்று நெருங்கியே பழகும் பாக்கியம் பெற்றவன் நான். அவருடைய ஆன்மா இன்று நம் முயற்சிக்கு ஆசி கூறுமாக. இந்தக் கப்பல் அவருடைய புகழ்பெற்ற நாமத்தைத் தாங்கி நிலவட்டும். இந்தச் சமயத்தில் இந்த வைபவத்தையும் என்னையும் ஆனந்த பாஷ்பம் பொழியும் தமது பரந்த விழிகளால் அவர் பார்த்துக் கொண்டிருப்பதை நான் கற்பனைக் கண்கொண்டு பார்க்க முடிகிறது. அவருக்கு இது ஓரளவு வேடிக்கையாகவுந்தானிருக்கும். இதோ, ஹார்வி கம்பெனியார்,: பி. ஐ. எஸ். என். கம்பெனியார் ஒத்துழைப்புடனும், இந்தியாவில் ஆட்சிபுரியும் சகல அதிகாரிகளின் ஒத்துழைப்புடனும், தூத்துக்குடிக்கும் கொளும்புவுக்குமிடையே கப்பல் சர்விஸை நான் ஆரம்பித்து வைக்கிறேன். ஹார்வி குடும்பத்தாரும் பி. ஐ. எஸ். என். கம்பெனியை நடத்தியவர்களும் சிதம்பரம்பிள்ளையைப் பொல்லாத வைரியாகக் கருதி, மி.

(5-ம் பக்கம் பார்க்க.)

அமிர்தாஞ்சன்

சகல வலி நோவுகளுக்கும்

கைகண்ட மருந்து

எங்கும் கிடைக்கும்

அமிர்தாஞ்சன் லிமிடெட்.,

சென்னை, பம்பாய், கல்கத்தா, பெங்களூர்.

அனுபவ ஞானியின் குறிப்புகள்

திருலோக சீதாராம்

நிழல் அருமை

“நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின்” என்று யாரோ பெரியவர் கூறிப் போனார். மிகவும் நன்றாகச் சொன்னார். நிழலின் அருமையை தெரிந்துகொள்ள வேண்டுமானால் நிழலுக்கு வந்து அனுபவிப்பதன் மூலம் தெரிந்துகொள்ள முடியாது. வெய்யிலிலே ஆளை நிறுத்திவைத்திருந்தால்தான நிழலின் அருமையை அவன் புரிந்துகொள்ள முடியும் வெய்யலில் வாடிக்கொண்டிருப்பவன்கூட நிழலுக்கு வந்து அதில் நிலைத்துவிட்டால், வெய்யலில் மற்றவர் படும் துன்பத்தை—அது தனக்கு முன்பு நன்கு அனுபவமானதாக இருந்தாலும்—மறந்துபோய் விடுவான் என்றே தோன்றுகிறது.

சுதந்திரம் வந்துவிட்டபிறகு நாட்டு மக்கள்—தேசபக்தர்கள்—நடந்துகொள்ளும் முறையைப் பார்த்தால்—அரசியலின் போக்கை ஆராய்ந்தால் இவர்கள் சுதந்திரத்திற்காக நடத்திய போரையும்—அடிமை வாழ்வின் துன்பங்களையும் — மறந்துபோய் விட்டார்களோ என்றுதானே தோன்றுகிறது.

அடிமையாக அன்னியர் ஆட்சியில் நாம் வருந்தியபோது நமக்கு சுதந்திரத்தின் அருமை தெரிந்திருந்தது என்பது உண்மை. அதனால்தான் கண்ணினுமினிய சுதந்திரத்திற்காக—பெரிய தியாகங்கள் செய்யும் ஊக்கமும் உணர்ச்சியும் இருந்தது. அது கிடைத்துவிட்ட பிறகு—நாம் விரும்பிய—ஆசைப்பட்ட சமூக ஒழுக்கம—சமரஸ வாழ்வு — பழைய கனவாகவே போய்விட்டது.

அன்னியராட்சியில் வஞ்சம்—அதிகாரத்திமிர்—கருப்பு மார்க்கெட்—தொழிலாளர் துயரம்—இப்படி எத்தனையோ துயரங்களை அனுபவித்து அதைப் போக்கவே சுதந்திரம் வேண்டினேம்—அது கிடைத்துவிட்ட பிறகு — அதைப் பெறப் போராடியவர்களின் ஆட்சியிலே—முற்கூறிய அழுக்குகள் வளர்ந்து கொண்டிருக்கின்றனவே தவிர—அவை தொலையுமென்றே தோன்றவில்லை—என் சுதந்திரம் வந்தது என்றுகூட ஒவ்வொரு சமயம் நாம் வருந்தவும் வேண்டியிருக்கிறது. அடிமைகளாகவே இருந்தாலாவது சுதந்திரத்தின் அருமையை நாம் மறக்காமலாவது இருந்திருக்கலாமல்லவா? இதை விதண்டாவாதமென்று சுலபமாக ஒதுக்கி விட முடியாது.

நாயுடு அவர்களின் அனுபவத்தில்—பழைய ஆட்சிக் காலத்தில் அவர் கண்ட ஒழுங்கீனங்கள்—சமூகச் சீர்கேடுகள் புதிய வாழ்வில் கூடப் போய்த் தொலையவில்லை. கர்மப் பயன் போல அவை இன்னும் நம்மைத் தொடர்ந்து வேட்டையாடுகின்றன. அந்தக் காலத்து அவருடைய அனுபவங்களே இன்றும் நாம் பெறக்கூடியவையாயிருக்கின்றன.

வஞ்சம், அதிகாரத் திமிர்—போலீஸ் தடபுடல்—இவை பற்றி அவர் கூறுவதைக் கேளுங்கள்:—

“நான் கூறுவது முப்பது வருஷத்துத் தொடர் அனுபவம். போலீஸ் போன்ற இலாகாக்களின் சில்லரை சிப்பந்திகளால் பல வழிகளில் பல சந்தர்ப்பங்களில் நான் தொல்லைக்காளானது உண்டு. சில சமயங்களில் இவற்றை நான் இலாகா தலைமையில் உள்ள மேலதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்றதும் உண்டு. நேர்மையான ஒரு சிலர் அந்தக்காலத்திலும் இருக்கத்தான் செய்தார்கள். அவர்கள் நான் கொண்டு சென்ற வழக்குகளில் தங்களால் முடிந்த ஒரு சில பரிகாரங்களை நிலை நாட்ட முயன்றும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நீதியை நிலைநாட்டிவிட முழுதும் முடியவில்லை. காரணம் மிகத் தெளிவானது. கீழ் சிப்பந்திகளைக் காட்டிக் கொடுப்பதென்பது பெரும்பாலும் வழக்கமில்லை. அவர்களை—அவர் செயல்களை—பூசி மெழுகிவிடுவதென்பது எழுதாக் கிளவியாகவும் கூட இருந்து வருகிறது. செய்கை அநீதியென்று தேர்ந்தாலும்—தீங்கு தடுக்கும் திறமிலார் மேலதிகாரிகள்.

‘சமூக வாழ்வில் அரசியல் அதிகார வர்க்கத்தின் ஒவ்வொரு சிப்பந்தியும் பொறுப்பற்று அகங்காரத்தால் மக்களுக்கு இழைக்கும் ஒவ்வொரு அநீதியையும் எதிர்த்து வழக்காடி நீதிஸ்தலங்களில் முடிவு காண்பது—பலன் தரக்கூடுமா வென்பது ஒருபுறம் இருக்க — அப்படி வழக்காடிக் கொண்டிருக்க எந்த பிரஜைக்கும் போதிய நேரமோ—வசதியோ இருக்குமா வென்பதும் கவனிக்கவேண்டியதுதான்.

“என்னைப்பொறுத்தவரையில் நான் அப்படியும் சில சமயங்களில் நீதிக்காகப் போராடியிருக்கிறேன். இந்தப் போராட்டத்தின்காரணமாக பல ஆண்டுகளை விரயம் செய்து—நீதிக்காக துடித்திருக்கிறேன். இவற்றில் பெற்ற வெற்றி பூஜ்யம்தான்.” நாயுடு அவர்கள் கூறியது முற்றிலும் உண்மை.

ஒரு ஆயுள் பூராவும் அவர் அறிந்து சேர்த்த விஞ்ஞான அறிவையும்—செல்வத்தையும்—சமூக நன்மைக்கு ஈடுபடுத்த முடியாமல் இன்றுகூட அவர் அநீதியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறார் என்பதை நேரே சென்று பழகியவர்கள் தெரிந்து கொள்ளலாம். போலீஸ், வருமானவரி இலாகாக்களால் அந்தநாளில் அவர் அடைந்த துயரங்களும்—அவற்றைப் போக்க—நீதிக்காக அவர் ஆரம்பித்த போராட்டங்களும்—இந்தநாளில்கூட இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. முடிவுக்கு வருமா வென்றும் கூற முடியவில்லை. அவரை நன்கறிந்து பாராட்டும் தனி மனிதர் பலர் இன்று ஆட்சிபீடங்களில் அமர்ந்திருக்கிறார்கள் என்பதையும்—அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்பதையும் பார்க்கும்போது நமக்கு வியப்பாகவும் வருத்தமாகவும்தான் இருக்கிறது.

தான் பிறந்த நாட்டின் சமூக வாழ்வில் இப்படி ஊழல்களை அவர் அறிந்து அவர் போராடிக் கொண்டிருப்பதனால்தான்—இங்கிலாந்து போன்ற வெளி நாடுகளில்—அரசாங்க ஊழியர்களும்—சமூக ஊழியர்களும் காட்டும் உயர்ந்த நடத்தையைப் பற்றி அவர் பரவசமடைந்திருக்கிறார் என்பதை நாம் தெரிந்துகொள்கிறோம்.

தொழில் துறையில் மக்களும் அரசாங்கமும் வெளி நாடுகளில் காட்டும் அக்கரையும் நேர்மையும் பழைய பிரிட்டிஷ் ஆட்சியிலும் நாயுடு இந்தியாவில் காணவில்லை—சுதந்திர அரசு வந்தபிறகும் காணமுடியவில்லை—இந்த உண்மையை மறுக்க நம்மிடம் ஒரு ஆதாரமும் இல்லை

இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் போக்குவரத்து மோட்டார் பஸ்களைத் திரம்பட வைத்து நடத்தி — மோட்டார் மன்னன் என்று புகழ் படைத்த நாயுடு அவர்கள்— இன்று தன் தொழில் துறையின் ஈடுபாடுகளைப் பெரிதும் குறைத்துக் கொண்டு தன்னை ஒடுக்கிக் கொண்டுவிட்டார் என்றால் அவர் போலீஸ் இலாகாவினால்—போக்குவரத்து — ஏற்றுமதி — இறக்குமதி — இலாகாக்களின் பொறுப்பின்மையால் அடைந்த தொல்லைகளே காரணம்.

இவற்றையெல்லாம் விட வருமான வரி விஷயமாக அவர் அடைந்திருக்கும் வேதனைகளே மிகவும் அதிகமாகும். இவற்றையெல்லாம் விரிவுறக் கூறுமுன் ஐரோப்பிய யாத்திரையை இரண்டாம் முறையாக அவர் மேற்கொண்டு பல நாடுகள் சுற்றிப் பார்த்துவந்த செய்திகளை அறிந்துகொள்வது அவசியம். இந்தத் தடவையில் இங்கிலாந்தில் அவர் பெற்ற அனுபவங்களை ஒருவாறு இதுவரையிலும் சித்தரித்தேன். அதன் தொடர்ச்சியை இனி பார்ப்போம்.

நவாப் கம்பெனிக்கு ஸ்ரீ கிரி விஜயம்.

மதுரையில், ஸ்ரீ ஐயப்பன் நாடகத்தைத் துடர்ந்து நடத்தி வரும் நவாப் ராஜமாணிக்கம் கம்பெனியாரின் ஸ்ரீ ஐயப்பன் நாடகத்தை 6—2—49 அன்று இரவு இலங்கையில் இந்திய பிரதிநிதியாக உள்ள ஸ்ரீ. வி. வி. கிரி விஜயம் செய்து கண்டு களித்துப் பாராட்டினார். இந்தியாவோடு நின்று விடாமல் இந்த அரிய கலையை இலங்கைக்கும் எடுத்து வரவேண்டுமென வேண்டிக்கொண்டார்.

ஸ்ரீ ராஜமாணிக்கம் வரவேற்று மாலைசூட்டினார்.

கலியாண காலங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பட்டு ஜவுளிகளுக்கும்

பாபு இண்டஸ்ட்ரீஸ்

பிராஞ்சு :— “பாபு ஹால்” சைனபஜார் ரோடு, திருச்சி.

Slate Manufacturers & பட்டு ஜவுளி வியாபாரம்
டவுன் ஸ்டேஷன் ரோட்
திருச்சிராப்பள்ளி

இந்தியர் கடலாடிய பண்டைச் சிறப்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்ஹேயைக்கொண்டு ராஜத் துரோகக் குற்றச்சாட்டுக்காக அவரை விசாரிக்கச் செய்து, ஆயுள் தீவாந்தர சிக்ஷையாக இரண்டு தண்டனை விதிக்கும்படி செய்தார்கள். அந்தத் தீர்ப்பை வாசித்துவிட்டு இந்தியா முழுவதும் துடித்துக் கொதித்தது. உயர்நீதி மன்றத்தார் அந்தத் தண்டனையை ஆறு வருஷச் சிறையாகக் குறைத்தனர். இதனால் அவருக்கிழைக்கப்பட்ட அநீதி ஓரளவு குறைக்கப்பட்டது. அவர்மீது சாட்டப்பட்ட குற்றமெல்லாம், தூத்துக்குடி மக்களை "வந்தே மாதரம்" என்று சொல்லவைத்தார் என்பதுதான்; சுப்ரமணயசிவா பேசிய கூட்டங்களுக்குச் சென்று இந்தியா சுயராஜ்யம் பெறவேண்டும் என்று அவர் கூறியதை மனப்பூர்வமாய் ஆமோதித்தார் என்பதுதான். இது. நாற்பது வருஷத்துக்கு முந்திய விஷயம். அவர்கள் இருவரும் தங்கள் ஆறு வருஷத் தண்டனையை அநுபவித்துவிட்டு வெளியே வந்தார்கள். அப்பொழுது இந்தியா மந்திரியாயிருந்த மார்லி பிரபு மி. பின்ஹேயை உயர்நீதி மன்ற நீதிபதியாக்க வேண்டுமென்ற சிபாரிசை ஏற்க முடியாதென்று கூறிவிட்டார். அதுமட்டுமல்ல; தம்முடைய நினைவுக் குறிப்பில் இது விஷயமாய் மிகவும் சுவாரஸ்யமான சில விஷயங்களை அவர் எழுதிவைத்திருக்கிறார். சக்கரம் ஒரு முழுச்சுற்று சுற்றிவிட்டது. சுப்ரமண்ய சிவாவும் சிதம்பரம் பிள்ளையும் எதற்காகச் சிறை சென்று துயர்ப்பட்டார்களோ அந்தச் சுயராஜ்யம் நமக்குக் கிட்டிவிட்டது. கோரல் மில்ஸ் சொந்தக்காரர்களான ஹார்வி குடும்பத்துப் பிள்ளைகளில் ஒருவர் இன்று என்னை விருந்தாளியாக ஏற்றிருக்கிறார். அத்துடன், பி. ஐ. எஸ். என் கம்பெனியார், சிதம்பரம் பிள்ளையின் திருநாமத்தைத் தாங்கிய நல்ல கப்பலுக்கு அனுகூலமாகத் தங்கள் சர்வீஸை நிறுத்திவிட்டார்கள். தூத்துக்குடிக்கு இழைக்கப்பட்ட அநீதி துடைக்கப்பட்டுவிட்டது. இந்த சர்வீஸை ஆரம்பித்துவைப்பதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்; நமது கொடியைத் தாங்கிச் செல்லப்போகும் இந்தக் கப்பலுக்குக் காலஞ்சென்ற நமது வீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரை இடும் பணி கிடைத்ததை என் பாக்யமாகக் கருதுகிறேன். இந்தியாவின் கப்பல் தொழிலைப் புனருத்தாரணம் செய்வதற்காக சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியார், திறமையும் தீவிரமும் வாய்ந்த தங்கள் நிர்வாகத்தினர் தலைமையில் பிரமாதமாகப் பாடுபட்டிருக்கிறார்கள்; இப்போதும் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பழைய ஆவேசங்கள், பழைய அசட்டுத்தனங்கள், பழைய துவேஷங்கள் மண்ணில் மறையுமாக. சுதந்தர இந்தியா சுடர் வீசுமாக.

பட்டினியிலிருந்து
நம்மை டீ எப்படிக்
காப்பாற்றுகிறது?

அயல்நாட்டு நாணயச் செலாவணி நம் நாட்டுக்கு இன்று மிகவும் அவசியமாக இருக்கையில்; நாம் ஏற்றுமதி செய்யும் 40 கோடி பவுண்டு தேயிலை, அவசியமான உணவுப் பொருள்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய ஏராளமான தொகையை அளிக்கிறது. டீ நம் நாட்டு கலாசாரத் தூதர் மட்டுமல்ல, பட்டினியைத் தடுக்க உத்திரவாதமும் அளிக்கிறது. ஏற்றுமதித் தொழிலில் இரண்டாவதாக நிற்கும் டீத்தொழில் நாட்டின் பொருளாதாரத் துறையில பிரதான ஸ்தானம் வகிக்கிறது.

டீயைப்பற்றிய சில உண்மை விவரங்கள்

- ★ ஏழு லக்ஷம் ஏக்ரா நிலத்தில் வருஷமொன்றுக்கு 54 கோடி பவுண்டு டீ உற்பத்தி செய்கிறோம்.
- ★ இத் தொழிலில் 10 லக்ஷம் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டிருக்கிறார்கள்.
- ★ உள் நாட்டில் அருந்தும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 3 அணா வரியும், ஏற்றுமதி செய்யப்படும் டீயிலிருந்து பவுண்டு ஒன்றுக்கு 4 அணா வரியும் சர்க்காருக்குக் கிடைக்கிறது. நாட்டு கஜானாவுக்கு வருஷமொன்றுக்கு கிட்டத்தட்ட ரூ. 13 கோடி வரும்படி கிடைக்கிறது.
- ★ மேலும் டீ கம்பெனிகள் செலுத்தும் வருமான வரி மூலமாக சர்க்காருக்கு கணிசமான தொகை கிடைக்கிறது.

டீ
ஒரு மகத்தான இந்தியக் கைத்தொழில்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

லிப்டன்ஸ்
என்றால் முதல்தரமான டீ

சிவாஜி

அறவலி காத்து நாளும் அன்னையின் பணிக்கென்றே நம்
உறையிலே உறங்கும் வீரம் உருவினேம் ஓங்கிவிட்டோம்.

திருச்சி. 20—2—49

நாராயணர் ஞானோபதேசம்

தீனபுரியில் நடந்த அகில இந்திய ரெயில்வே ஊழியர் பெடரேஷன் பொது கௌன்சில் கூட்டத்தில் நாராயணர் செய்திருக்கும் பிரசங்கம் மகத்தானதொரு ஞானோபதேசமாகும். இந்த உபதேசத்தில் ஜெயப்பிரகாசர் நாட்டு நிலை, ரெயில்வே ஊழியர் இயக்க நிலை, அரசாங்க மனப்பான்மை, சொந்த செல்வாக்கு ஆகிய பல விஷயங்கள் பற்றியும் விரிவுபடப் பேசியிருக்கிறார்.

ரெயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமா என்று 'பாலட்' எடுத்து ஏற்பட்ட முடிவு வேலை நிறுத்தம் வேண்டுமென்ற கருத்தையே தெரிவித்தது நேயர்களுக்கு நினைவிருக்கும். இந்த முடிவை இப்போது கொண்டு செலுத்தக் கூடாதென்றும் வேலை நிறுத்தப் பேச்சையே சில காலத்துக்கு ஒத்திவைக்க வேண்டுமென்றும் தீனபுரியில் ஜெயப்பிரகாஷ் அழுத்தமாக வற்புறுத்தி யிருக்கிறார். இதற்குப் போதுமான காரணங்களும் காட்டியிருக்கிறார்.

சுமுகமான முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்தி ரெயில்வே ஊழியர் தம் குறைகளை நீக்க முயற்சிக்கலாம் என்ற கோபாலசாமி அய்யங்காரின் அழைப்பை ஏற்று நாராயணர் சென்று நடத்திய பேச்சு வார்த்தைகள் சில குறைகளை உடனடியாக நீக்க உதவி செய்திருப்பதுடன், மேலும் பேச்சு வார்த்தை நடத்தி வெற்றிபெற முடியும் என்ற திடமான நம்பிக்கையையும் உண்டாக்கின.

ரெயில்வே மந்திரி கோபாலசாமி அவர்களுக்கும் ஜெயப்பிரகாசருக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தைகள் தனிப்பட்ட முறையில் பரஸ்பரம் மகத்தானதொரு கௌரவ உணர்ச்சியைப் பயத்திருப்பதுடன் ரெயில்வே ஊழியர் பெடரேஷனுக்கு அரசாங்கத்தின் முன்னர் இதுகாறும் இருந்துள்ள செல்வாக்கைப் பல படிகள் உயர்த்தியிருக்கின்றன என்பது தெளிவாகப் புலனாகிறது.

வேலை நிறுத்தம் தற்போது தேவையில்லையென்பதுடன், அது வெற்றிகரமாக இருக்க முடியாது என்பதையும் நாராயணர் எடுத்துக் காட்டியிருக்கிறார். பொதுமக்களது ஆதரவு நியாயமான வேலை நிறுத்தங்களுக்கே கிடைக்கக் கூடாத வகையில் பிரசாரம் நடைபெற்று வருவதுடன், எல்லாவிதமான துன்பங்களையும் வேலை நிறுத்தங்களுடன் சம்பந்தப்படுத்திப் பார்க்கும் அவசர மனப்பான்மையும் மக்களிடையே நிலவுகிறது. பொதுஜன ஊழியருக்குப் பொதுஜன ஆதரவு இன்றி வெற்றி கிட்டாது என்பது கவனிக்க வேண்டிய விஷயம்.

மேலும் ரெயில்வே ஊழியரிடையேயும் வேலை நிறுத்தத்துக்குப் போதுமான ஆதரவு இல்லை என்றும் நாராயணர் எடுத்துக் கூறியிருக்கிறார். ஆபத்துக்கால நிதிக்காக ஊழியரிடமிருந்து கிடைத்த தொகை ஐம்பதினாயிரம் ரூபாய் தான், ஆனால் எதிர் பார்க்கப்பட்டது நான்கு லட்சத்துக்கு மேல், என்ற உண்மையை இதற்குக் காரணமாகக் காட்டியிருக்கிறார்.

சமஷ்டியிலுள்ள கம்யூனிஸ்டுகள் தம்மைக் கருங்காலி என்றும், அரசாங்க தாஸன் என்றும் குற்றம் சாட்டுவதற்குத் தக்கபடி பதில் கூறித்தமது தூய்மையை லோகாபிராமமாக்கியிருக்கிறார் நாராயணர்.

கம்யூனிஸ்டுகளை சமஷ்டியினின்று விலக்கிவிட வேண்டும் என்று பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். இந்த விஷயத்தில் கம்யூனிஸ்டுகளின் எதிர்ப்பு மிகவும் பலமாயிருக்குமென்பதுடன், சமஷ்டியின் கட்டுக்கோப்பே இதன் காரணமாகத் தளர்ந்து விடுமோ என்று அச்சமுற வேண்டியிருக்கிறது. ஏனெனில் சமஷ்டி முறையில் இயங்கி வரும் இந்த இயக்கத்தில் பல சுதந்திர, பிராந்திய சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. இவற்றில் முக்கியமான சில பெருவாரியான கம்யூனிஸ்டு செல்வாக்கிலிருக்கின்றன.

எனவே கம்யூனிஸ்டுகள் சமஷ்டியைப் பூரணமாகத் தங்கள் ஆதீனத்துக்குக் கொண்டுவர முயற்சி செய்து வெற்றிபெறாவிட்டால் இயக்கத்தை உடைக்க விழைவர் என்பதில் சந்தேகமில்லை.

அரசாங்கம் புதிய ரெயில்வே சங்கமொன்றை சிருஷ்டித்துத் தன் செல்லப் பிள்ளையாக அதை வளர்த்துவரும் தருணத்தில் இத்தகைய பிளவு பயங்கரமான பலன்களை விளைவிக்குமென்பதில் ஐயமில்லை. இந்த உண்மைகளை மனதில்கொண்டு பார்க்கும்போது நாராயணர் கம்யூனிஸ்டுகள் பற்றி வகுத்த கொள்கை காலப்பொருத்தமற்றது என்றே தெரிகிறது.

இயக்கத்தின் அமைப்பையே சமஷ்டி நிலையினின்று அகில இந்தியாவுக்கும் ஒரே பலம் பொருந்திய ஸ்தாபனமாக மாற்றியமைக்கவேண்டும் என்று ஜெயப்பிரகாசர் கூறியிருக்கும் யோசனை ஆற்றல் மிகுந்த ஆக்க யோசனையாகும். இவ்வாறு மாற்றியமைக்கப்பட்டால் இயக்கத்துக்கு அதிக பலம்தோன்றும் என்பதில் சந்தேகமில்லை.

கம்யூனிஸ்டுகள் இந்தச்சீரமைப்பு யோசனையை எதிர்ப்பார்களென்றே தோன்றுகிறது. ஏனெனில் ஒன்றுபட்ட ஸ்தாபன அமைப்பில் தங்கள் செல்வாக்கு பலமற்றுக் குறைந்து போகலாமென்று அவர்களுக்குத் தோன்றலாம்.

அரசாங்கத்துக்கு ஜெயப்பிரகாசர் கூறியிருக்கும் யோசனைகள் நிர்வாகத்தினர் வரவேற்று ஆராயத்தக்கன. தொழில் துறைத் தகராறுகளைப்போக்க சாஸ்வதமான ஒரு ஸ்தாபனம் வேண்டுமென்றும் அதில் ஊழியர் பிரதிநிதிகளும், அரசாங்கப்பிரதிநிதிகளும் சமதையாக அங்கம் வகிக்க வேண்டுமென்றும் கோரியிருக்கிறார் நாராயணர்.

பணவிஷயங்களில் மற்ற எல்லா அரசாங்க இலாகாக்களையும் போலவே ரெயில்வே இலாகாவும் நிதி இலாகாவை நோக்கி வாய்பிளந்து அதன் கருணைக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது. ரெயில்வே இலாகாவை மாத்திரம் இந்தப்பிடியிலிருந்து விலக்கி சுயதேவைப் பூர்த்தியுடையதாகச் செய்ய வேண்டுமென்கிறார் நாராயணர். இது அனுபவ சாத்தியமற்றதென்றே நமக்குத்தோன்றுகிறது. மேலும் ரெயில்வே இலாகாவுக்கு மாத்திரம்தான் இந்தச் சலுகையென்றால் மற்ற இலாகாக்களுக்கு எப்படியிருக்கும்! தவிரவும் தங்கள் செலவுக்குப்பிறதுறை வருமானங்களையே எதிர்பார்க்கும் இலாகாக்கள் தனித்து வாழவே முடியாது. வருமானங்களையெல்லாம் பொதுப் பொக்கிஷத்தில் சேர்த்து செலவுதொகைகளை சமயோசிதமாகப் பிரித்தெடுத்துக்கொள்வதைத்தவிர வேறு வழி கிடையாது.

ஆனால் ஜெயப்பிரகாசரது கோரிக்கை அரசாங்க நிர்வாகத்தில் இருக்கும் பெருங்குறை ஒன்றை நமக்குக் குத்திக்காட்டுகிறது. பட்ஜெட் தயாரிப்பிலும், அதைக் கொண்டுசெலுத்துவதிலும் இருக்கும் அக்கரையற்ற அறிவின்மை தேச வருமானத்தைப் பலனற்ற மண்ணாகச் செய்துவிடுவதன் மூலம் மக்களது உற்பத்திசக்தியைநாளுக்கு நாள் க்ஷீணமடையச் செய்துவிடுகிறது. இது விஷயத்தை அரசாங்கம் சற்று உன்னிப்பாக கவனிக்கவேண்டும்.

ஜெயப்பிரகாசரது தீனபுரி பிரசங்கம் அறிவுத் தெளிவும், சேவையுணர்ச்சியும், காம்பீர்யமும் நிறைந்த அருமையானதொரு ஞானோபதேசமாகும்.

(இத்தலையங்கம் எழுதி முடிக்கப்பட்டகையோடு வெளிவந்திருக்கும் செய்திகள் முக்கியமானவை அகில இந்திய ரெயில்வே ஊழியர் சமஷ்டியின் பகுதிகளும், கம்யூனிஸ்டுகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதுமான தென்னிந்திய, பி. பி. ஸி. ஐ, ஜி. ஐ. பி. ரெயில்வே தொழிற்சங்கங்களின் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்து அவற்றை சமஷ்டியினின்று விலக்க தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. மேலும் தனிப்பட்ட கம்யூனிஸ்டு அங்கத்தினர் பேரிலும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. ஜெயப்பிரகாசரின் கொள்கைக்கே தீனபுரி சமஷ்டி கௌன்சிலின் கூட்டம் மிகப் பெருவாரியான ஆதரவளித்திருக்கிறது.

வேலை நிறுத்த நோக்கம் வாபஸ் செய்யப்பட்டதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட உடனே அரசாங்கம் ரெயில்வே மந்திரியின் தலைமையில் இரண்டு சமஷ்டி அங்கத்தினர், இரண்டு ரெயில்வே போர்டு அங்கத்தினர் கொண்ட கமிட்டி நிறுவப் போவதாகவும் தெரிகிறது.)

ரயில்வே பட்ஜெட்

1949-50 ஆண்டுக்கான ரயில்வே பட்ஜெட் வழக்கம் போலவே ரயில்வே இலாகாவின் வருமான சக்தியையும், நிதி பலத்தையும் வற்புறுத்துகிறது. இந்த வருஷ பட்ஜெட்டின் புதிய அம்சம் என்னவெனில் நிகரத் தொகையில் பெரும் பகுதி புதுப்பிப்பு நிதிக்கு சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதேயாகும். பழைய ரயில்வே நிதி விவகாரங்களை கவனிக்கும்போது இது வரவேற்கத்தக்க மாற்றமென்று தோன்றுகிறது. இதுகாறும் ரிப்பேர்களுக்கும், புதுப்பிப்பு வேலைகளுக்கும் ரெயில்வே நிதியினின்று ஒதுக்கப்பட்ட தொகை ரொம்பக் குறைவாயிருந்ததுடன் மிகுதியிருந்த லாபமெல்லாம் பலவாறு பிடுங்கப்பட்டு உபயோகமற்றுப் போயிருக்கின்றன.

பட்ஜெட் பிரசங்கம் இந்திய ரயில்வேயின் வருங்காலத்தை நம்பிக்கை நிறைந்ததாகச் சித்தரித்திருக்கிறது. திறமையான நிர்வாகமும், பொதுஜன சேவையில் அக்கரையும் இருந்தால் இந்த நம்பிக்கை வீணாகாது.

TRADE MARK GVR
குவாலிடி காப்பி
திருச்சி.

விமரிசனம்

குங்கும அலங்காரி

''திருலோகம்''

நண்பர் திரு. வ. ஷண்முகம் அவர்களுடைய எழுத்துத் திறமையில் எனக்கு எப்போதுமே நம்பிக்கை உண்டு. அதற்குக்காரணம் இரண்டு. நண்பருடைய ''வாழ்க்கைச்சுழல்'' நாவல் அதற்கோர்எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. வாழ்க்கைச் சுழலின் தெவிட்டாத தேன் ததும்பும் நடையும், இயற்கை வர்ணனைகளும், உள்ளப் பாங்கும், பிறநாட்டுப் புது அனுபவங்களும் நம்மை மெய்மறந்த ஒரு உலகுக்கு அழைத்துச் சென்றன. அது காரணமாக, நண்பர் அவர்களுடைய எழுத்து ஓவியம் என்றால் அதிலே ஒருதனிக்கவர்ச்சி அமைந்திருக்கும் என்ற எண்ணம் என் உள்ளத்தில் நிறைந்திருந்தது. பொதுவாக மற்ற நாவலாசிரியர்கள், அனுபவக்குன்றுகளை எடுத்துச் சொல்லுவதில் ஒருசிறிது தவறி விடுகிறார்கள் என்றே சொலல வேண்டும். வாழ்க்கையைக் கவனிக்க கலைக்கண்கள் வேண்டும். கண்டவற்றை கலை அழகு ததும்ப வர்ணிக்கும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். இந்த இரண்டு சிறப்பான அம்சங்களும் திரு. ஷண்முகம் அவர்கள் நாவலிலே பொதிந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. நண்பரின் 'சந்திரலேகா,' ஒரு இலக்கிய வெற்றி என்றே கருத வேண்டும்.

இப்போது புதிதாக—முன்னர் 'மாதமணி'யில் தொடர்ந்துவந்த ஆயிரக் கணக்கான நாவல் பிரியர்களுக்கு ஆனந்தம் தந்த அந்த 'குங்கும அலங்காரி' இப்போது நெஞ்சைக் கொள்ளை கொள்ள ஓர் உரு வெடுத்து வந்திருக்கிறாள். 'குங்கும அலங்காரி' எனும் பெயரே நம்மை வசீகரிக்கிறது. பெயரில் என்ன இருக்கிறது என்று வேடிக்கையாக ஷேக்ஸ்பியர் ஒரு வேடிக்கைக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். நமது கவிஅரசர் தாகூர் அதற்கு அழகாக பதில் அளித்திருக்கிறார். அதாவது பெயரில் எல்லாமே இருக்கிறதுஎன்று.குங்கும அலங்காரி—ஆம், நெற்றிக் குங்குமத்தில்தான் ஹிந்து தர்மத்தின் சின்னமான புனிதத் தன்மையே பொதிந்திருக்கிறது. இக்குங்கும அலங்காரி நாடகம் அ. இ. ரேடியோவில் திருச்சி நிலையத்தில்—(சிறிது மாறுதல்களுடன் தான்) நடைபெற்றபோது தமிழ் நாட்டு நாடக உலகையே, ஒரு கலக்குக் கலக்கி விட்டது என்றுதான் சொல்லவேண்டும் 'குங்கும அலங்காரி'யை திரையில் விரைவில் எதிர்பார்க்கலாம். அதே மாதிரி மேடையிலும் வெகு விரைவில் பார்க்கலாம்.

'குங்கும அலங்காரி' உள்ளத்தை நெகிழ்விக்கும் ஒரு அற்புதச் சித்திரம் உணர்ச்சியும் உயிரும்கொண்டு நம் முன் நடமாடுகிறாள். ஏழ்மையின் கொடுமை, காதலின் வெற்றி, கலையின் வெற்றி, பிரிந்தவர் கூடினால் பித்தரும் ஆவரோ எனும நிலை, அற்புதமான கதைக் கட்டுக் கோப்பு இத்தனையும் கலந்த அரிய மலர்மாலை குங்கும அலங்காரி. அண்ணனிடம் தங்கைக்கு உண்டாகும் அன்புப் பாசம், உண்மைக் காதலுக்கு உரிய அருமையான காந்த சக்தி, தீயவழிகளில் சென்றால் அதன் தெள்ளிய முடிபு இன்ன பிற விஷயங்களை வெகு ஆனந்தமாக சுவை ததும்ப வர்ணித்திருக்கிறார் நண்பர் ஷண்முகம் அவர்கள்.

குங்கும அலங்காரியைத் தமிழகச் சோலை முழுக்க உலவ விடவேண்டும் என்பது என் ஆசை. குங்கும அலங்காரி—புத்தகசாலைகளை மட்டுமல்ல நமது இதயச் சோலைகளையே வளப்படுத்தும் மோகன சக்தி படைத்த அற்புத நாவல். இப்போது நாவலாசிரியர் தொடர்ந்து 'நவ இந்தியா' எனும் தினசரிப் பத்திரிகையில் எழுதி வரும் 'கண்ணம்மா' நாவல் தனி ரகம். வாழ்க்கைச் சுழலும், சந்திரலேகாவும், வெவ்வேறு துறைகளைச்சேர்ந்தவை. இந்தக் குங்கும அலங்காரி—இது தனக்கென தனி வழி வகுத்த புதுமைக்குரல். தென்னாட்டுக் கலைக்காடு மணக்க வந்த கற்கண்டு குங்கும அலங்காரி. சொந்த நாவல் வானில் சுடர் விளக்கேற்றிய வண்ணமதி குங்கும அலங்காரி. நாவல் உலகின் நறுமலர் குங்கும அலங்காரி. அழகான எழுத்துத் திறமையும், அரிய கலை உள்ளமும் சிறப்பான வாழ்க்கை அனுபவமும் மிக்க நண்பர் ஷண்முகம் அவர்கள் கலா கன்னிகைக்கு இம்மாதிரி பல மலர்மாலைகள் சாற்றவேண்டும் என்பதே என் பேரவா. வாழி ஷண்முகம், வாழி அலங்காரி.

✱

திருச்சி ஸ்டார் டாக்கீஸில்

பிப்ரவரி 25-உ வெள்ளிக்கிழமை மகத்தான ஆரம்பம்!

நேர்த்தியான நிகழ்ச்சிகள்....
மனதைக்குலுக்கும் சம்பவங்கள்....
சாகசச்சிக்கல்கள்
பூத்துக்குலுங்கும் கலைத்தோட்டம்....



ஜூபிடரின்
வேலைக்காரி

பிப்ரவரி 25-உ வெளிவருகிறது

கதை.வசனம்: ஸி.என். அண்ணாத்துரை
டைரக்ஷன்: ஏ.எஸ்.ஏ.சாமி
ஸ்டூடியோ: சென்ட்ரல்

திருச்சி ஸ்டார் டாக்கீஸில்

தினசரி 2 காட்சிகள் ✱ மாலை 6-30, இரவு 10 மணி

சனி, ஞாயிறு மாட்னி மாலை 3 மணி

அன்றுட காட்சிகளுக்கு காலை 11 மணி முதல் 1 மணிவரை

முதல் 2 வகுப்புகளுக்கு மட்டும் டிக்கட் வாங்கிக்கொள்ளலாம்.

இந்தியாவின் மொழிப் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாஷை விஷயத்தில் தீவிர தேசிய வாதம் பேசும் நாம் ம்பேச்சளவில் இதந்த மரியாதை செலுத்துவதுடன் நின்றுவிடுவதையும். அரசியல் நோக்கங்களுக்கு அதைப் பயன்படுத்திக்கொள்வதையும்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது.

ஒரு பாஷை இறுதியாக வளர்ச்சி பெறுவது அதன் இயற்கை வளர்த்தினுல்தான்; சட்டங்கள் இயற்றுவதாலோ தீர்மானங்கள் நிறைவேற்றுவதாலோ எந்த பாஷையும் வளர்ச்சி பெற்றுவிடாது ஆகையால், ஒரு பாஷைக்குச் செய்யப்படும் உண்மையான சேவை அந்த பாஷையின் மதிப்பையும், உபயோகத்தையும், இயற்கை வளர்ச்சியையும் வளர்ப்பதேயாகும்.

சம்ஸ்கிருதம் எவ்வளவு சிறந்த பாஷையாக இருப்பினும்சரி, செய்ய வேண்டிய கடமைப்படி அதைப் பரப்ப நாம் எவ்வளவுதான் விரும்பினுலும்சரி, அந்த பாஷை ஒரு உயிருள்ள பாஷையாக ஆகவே முடியாது. ஆனல், அந்த பாஷை இதுவரை இருந்துவந்ததுபோல், இனியும், நம்முடைய பாஷைகள் பலவற்றிற்கு அடிப்படையாகவும் உட்பொருளாகவும் இருந்துவரவேண்டும். இதைத் தவிர்க்கமுடியாது. ஆனல் இதை வலுக்கட்டாயமாகப் புகுத்த முயற்சிப்பது அத்தியாவசியமுமல்ல; விரும்பத்தக்கதுமல்ல- அவ்வித முயற்சியால் விபரீதமான பலன்களே எற்படக்கூடும்.

லட்சியம் என்ன?

"நாம் வளர்க்கவேண்டிய அகில இந்திய பாஷை, காலத்திற்கேற்ப வளர்ந்து கொடுக்கக்கூடியதாயும், புதிய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளக்கூடியதாயும், இத்தனை காலமாக அதில் ஊறிப்போய்க்கிடக்கும் அம்சங்களைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடியதாகவும். இருக்கவேண்டுமென்பது நன்கு புலனுகும். மேலும், அந்த பாஷை முக்கியாம்சத்தில் மக்களின் பாஷையாக இருக்கவேண்டுமேயொழிய, பாண்டித்தியம்பெற்ற ஒரு சிறு கோஷ்டியின் பாஷையாகஇருக்கக்கூடாது. அந்த பாஷை கண்ணியமுடையதாகவும் சக்தி நிறைந்ததாகவும் இருக்கவேண்டும் அத்துடன், இயற்கைக்கு விரோதமானபோக்கையும், மேலெழுந்தவாரியான கருத்துக்களையும், அலங்காரத்தையும் அறவே ஒழிக்கும் வகையில கடுமையான முயற்சியும் இருக்கவேண்டும். அதன் அடிப்படையும், அதன் பொருள் செறிவில் பெரும்பாகமும் சம்ஸ்கிருதத்தை ஆதாரமாகக் கொண்டவையாகத்தான் இருக்கவேண்டியிருக்கும். ஆனல், மற்ற மூலங்களிலிருந்து, குறிப்பாகப் பாரசீக பாஷையிலிருந்தும், ஆங்கிலத்திலிருந்தும் மற்ற அன்னிய பாஷைகளிலிருந்துங்கூட. எடுத்த பல வார்த்தைகளும், சொற்றொடர்களும் கருத்துக்களும் இதில் அடங்கியிருக்கும். துறைச் சொற்கள் விஷயத்தில், சாதாரணமாக வழக்கிலிருந்துவரும் வார்த்தைகள் அனைத்தையுமே முதலில் நாம் எடுத்துக்கொண்டுவிடவேண்டும். புதிய வார்த்தைகளைக் கண்டுபிடிக்கும்போதுங்கூட, சாதாரணமாக எல்லாராலும் உபயோகிக்கப்படுவதும் புரிந்துகொள்ளக்கூடியதுமான வார்த்தைகளையே கூடியவரையில் நாம் அனுசரிக்கவேண்டும். துறைச் சொற்கள் விஷயத்தில், சாத்தியமான வரையில், வளர்ந்துகொண்டேவரும் உலக பாஷையைவிட்டு நாம் ஒதுங்கிப்போய்விடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

பாஷையைப்பற்றி நாம் இவ்வளவு பிரமாதமாக சர்ச்சை செய்கிறோம். ஆனல், சரியான அகராதி ஒன்றுகூட நமக்குக் கிடையாது. உலகத்திலுள்ள பெரிய பாஷை எதைவேண்டுமானுலும் எடுத்துக்கொள்ளுங்கள். அதில் எத்தனை அகராதிகளும் கலைக்களஞ்சியங்களும் அவைபோன்ற நூல்களும் இருக்கின்றன. நியாய ஸ்தலத்தில் பேசப்படுவதையும் பள்ளிக்கூடப் பாட புத்தகங்களில் கையாளப்படுவதையும் வைத்துக்கொண்டே நாம் பாஷையை மதிப்பிடுகிறோம். நம்முடைய அகராதிகளும் பள்ளிச் சிறுவர்களுக்கெனத் தயாரிக்கப்பட்டவைதான். ஆகையால் நாம் செய்யவேண்டிய முதல் காரியம், சம்ஸ்கிருத பாஷைக்கும் நம்முடைய தற்கால பாஷைகளுக்கும், திருத்தமான முறையில் விரிவான அகராதிகளைத் தயாரிப்பதேயாகும்.

லிபி விஷயம்

எழுத்தை எடுத்துக்கொண்டால் நாகரி எழுத்தே முதன்மை பெறும் என்பது தெளிவு. ஆனல், கலாசாரத்தையொட்டியும்சரி, அரசியலையொட்டியும்சரி, ஒன்றையே வற்புறுத்துவது தவறென்று நான் கருதுகிறேன். ஆதலால், கோரப்படும் இடங்களில் உருது எழுத்துக்களையும் அங்கீகரித்துக் கற்றுக்கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். எல்லாரும் இந்த இரண்டுவகை எழுத்துக்களையுமே கற்றுக்கொள்ளவேண்டுமென்று நாம் சொல்ல முடியாது. அது தாங்கமுடியாத பளுவாகிவிடும். ஆனல், தஸ்தாவேஜுகளையும் பிறவகைப்பத்திரங்களையும் தயாரிப்பதற்கும், போதிய எண்ணிக்கையுள்ளவர்கள் கோருமிடங்களில் பள்ளிக்கூடங்களில் போதனைக்கும் உருது எழுத்துக்களை அங்கீகரிக்கவேண்டும்.

ரோமன் எழுத்துக்களை நாம் அதிகமாகக் கையாளமுடியுமென்று எனக்குத்தோன்றவில்லை. ஆனல், சைன்யத்தில் ரோமன் எழுத்துக்கள் பயன்தரக்கூடிய வகையில்உபயோகிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ரோமன் எழுத்துக்களைக் கற்றுக்கொடுப்பது சுலபமென்று தெரியவந்திருக்கிறது. சைன்யத்தில் பலரையும் ஒன்ருக இணைப்பதற்கும் அது ஓரளவு உதவியிருக்கிறது. ஆகையால், ரோமன் எழுத்துக்களை எந்த அளவுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாமென்பதை ஆராய்ந்து பார்த்து சாத்தியமான இடங்களிலும், அதை உபயோகிப்பது நல்லதென்று தோன்றும் போதும் அவைகளை உபயோகிப்பது நல்லது.

In the Court of the Subordinate Judge of Tiruchirapalli.

O. P. No. 144/1948.

1. A.G. Mohamed Ibrahim Sahib. 2. Zeenath Bibi. 3. Zubeida Bibi. 4. Mohamed IsmailSahib. 5. MinorAhmed Hussain Sahib. 6 Minor Abdul Salam Sahib. 7. Minor Abdul Khaliq Sahib. Minor Petitioners 5 to 7 are represented by their mother and next Friend 2nd Petitioner, residing at Palakarai Tiruchirapalli—Petitioners.

Notice is hereby given that the above application has been presented by the Petitioners for the grant of a certificate under the Succession certificate Act 1889, with respect to certain debts and Securities of deceased N. B. Abdul Gafoor Sahib & has been posted to 22—2—1949 for hearing. Persons interested are at liberty to appear and oppose the same.

K. JAMAL MOHAMED
Advocate for Petitioners

இதுதானே உலகம்

"அவதாரம்"

அதிசயங்கள்

தலைவேதனைக்கிடையே இரவு முழுவதையும் போக்க வேண்டியிருக்கிறதே என்ற வருத்தம் எனக்கு. சென்னை நீங்கிய நீலமலைத் துரித ஓட்ட நீராவி இயக்கி தண்டவாளம் ஊர்தியிலே (மிரண்டு விடாதீர்கள்! கேவலம் Bluemountain Express தான்) குளுமை நிறைந்த பெட்டி ஒன்றில் ஏறிய என்னை, வழியனுப்பவந்த தோழர்கள் பிடித்து இழுத்து வந்து வறண்ட சூழலிலே தள்ளிவிட்டார்கள். தெரிந்த ஆசாமி ஒருவர் பிரயாணம் செய்கிருர் என்பது காரணம். தெரிந்தவர் என்ருலே வீண் தொணதொணப்பு, அன்லகிக்கபிள் அக்கப்போர் என்றுதான் அர்த்தம் எனது அகராதியிலே. உம், இருந்தாலும் என்ன செய்வது! அவர்களது வீணெழவு பிரலாபங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த எனக்கு உற்சாக மூட்டியது திடீர்ச்செய்தி ஒன்று. பத்திரிகையிலிருந்து படித்தார் ஒருவர். ஊரிலே, உலகத்திலே, அதிசயங்கள் நடக்காமல் இல்லை என்பதைச் சொல்லியது அது.

அவர் படித்தது 'மெயில்'. அதில் ஒரு நியூஸ். திருவனந்தபுரத்திலே நடு வீதியில் நடந்ததாம் இது. கழுகு ஒன்று நாகம் ஒன்றைக்கொத்தியெடுத்து மேலே பறந்ததாம். பாம்பு பருந்தைக் கடிக்க, அதற்கு விஷமேறி பாம்பை நழுவவிட்டதாம். கீழே விழுந்த பாம்பு வீதியில் ஓடுகிற பிளெஷருள் விழுந்து அதில் உல்லாசப் பிரயாணம் செய்த பிரமுகரைக் கடித்துவிட்டதாம். கழுகும் மயங்கி விழுந்து செத்துப்போச்சு. ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஆசாமியும் 'மர்கயா'!

எப்படியிருக்கு

இதை வாசித்த நண்பர் 'எப்படியிருக்கு, பார்த்தீர்களா!... என்ன ஸார் உலகம்! என்ன வாழ்க்கை! பாருங்களேன் மனிதனுக்கு ஆபத்து எப்படி எங்கே என்ன வேளையிலேவரும் என்றே சொல்லமுடியலியே, ப்சு....ச்சு!' என அனுதாபப்பட்டார்.

'சாவு எப்படியும் தனது வேட்டையைப் பிடித்துவிடும். பரிட்சித்து மகாராஜன் கதை தெரியாது உங்களுக்கு? சாவுக்கு பயந்து நடுக்கடலுக்குப்போன பரிட்சித்து ராசனை பாம்பு எலுமிச்சம் பழமாக வந்து கடிச்சு........' என்று புராணம் தொடங்கினுர் நண்பர்.

'ஆமாமா' என்ருர் பத்திரிகை படித்தவர். இதுமாதிரி எவ்வளவோ உண்டு—கதைகளும் நிஜச் சம்பவங்களும். எவனே எறிந்த அம்பு மரத்திலே தங்கி, காற்றடித்தபோது விழுந்து மரத்தடியில் படுத்திருந்த பார்ப்பனியைக்கொன்றுபழியைவேறு எங்கோ விதைக்கக் காரணமாயிற்று என்றுதிரு விளையாடற் புராணத்திலே கூட ஒருபடலம் உண்டு என்று நினைத்தேன். ஆனல் சொல்லவில்லை பேச்சுக்கும் எனக்கும் ரொம்பதூரம்.

(அடுத்த இதழில் முடியும்)

சங்கீத ரசிகர்களுக்கு விருந்தாக 'கொலம்பியா' ரிகார்ட் இரண்டு புதிய (G. E. 6585) இசைத்தட்டுகளை அளித்திருக்கிறது **பாடினுள் ஓரு தமிழ்பாட்டு** (C. E. I 16383) என்ற கு. ச. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இயற்றிய பாடலும் **காந்திபுகழ்** (C. E. I 16384) என்ற சாரதி இயற்றிய பாடலும்தான் அவ்விரண்டும். இரண்டு பாட்டுக்களையும் வெகு இனிமையாக உணர்ச்சியுடன் பாடி இருக்கிருர் அன்பர் S. T. முருக பூஷணம் அவர்கள் முன்னுக்கு வரக்கூடிய இளம் பாடகர்களில் முருக பூஷணமும் ஒருவர். சிறந்த சங்கீத வித்வான்களின் பாணியில் பாடி இருக்கும் அன்பர் முருகபூஷணம், பிரபல சினிமா நடிகரும் பாடகருமான திரு, எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்களின் மைத்துனர் என்பதை ரசிகர்கள் அறிந்திருக்கலாம்.

“மூர்த்தி”

ஜூபிடரின் வேலைக்காரி தமிழ் நாடெங்கும் குதூகலத் துடன் தன் ஆரம்ப வைபவத்தைக் கொண்டாடப் போகிறாள் இம் மாதம் 25-ந்தேதி. அவளை நீங்கள் கண்டுகளிக்கலாம். ராமசாமி பாலையா, நம்பியார், ராஜம்மா, ஜானகி முதலிய பிரபல முகங்களை இதில் காணலாம். அது தவிர லலிதா பத்மினியின் புது விதமான நடனங்கள் இதில் ஒரு தனியம்சமாம். கதை வசனம் அண்ணாத்துரை. டைரக்ஷன் ஏ. எஸ். ஏ. ஸ்வாமி என்றால் படத்தின் மதிப்புக்கு வேறு என்ன தேவை.

❀ முருகன் டாக்கீஸாரின் **ரத்னகுமார்** வேகமாக வளர்ந்து வருகிறானாம். சின்னப்பா, பானுமதி நடிக்கும் பாகங்கள் அற்புதமாக அமைந்திருக்கிறதாம். இவர்கள் இருவரும் பிச்சைக்காரர்களாகத் தோன்றி மெச்சத்தக்கபடி நடித்துள்ளார்களாம். சின்னப்பா பானுமதி என்றால் பாட்டுக்குக் கேட்கவா வேண்டும். தமிழ் வருஷப்பிறப்புக்குத் திரையிடத் திட்டம் போட்டுக்கொண்டு உழைத்து வருகிறார்களாம் டைரக்டர்களான கிருஷ்ணனும்-பஞ்சுவும்.

❀ பாக்யா ஆரம்பித்து வைத்த **மங்கையற்கரசி** பல கஷ்டங்களையும் அனுபவித்துவிட்டு இப்போது நாகூரின் பராமரிப்பில் வளர்ந்து வருகிறது. சின்னப்பா கண்ணாம்பா, அஞ்சலி தேவி முதலியோர் நடிக்கும் இப்படத்தில் கிருஷ்ணன் மதுரம் கூட சேர்க்கப்படலாமென்று தெரிகிறது. லலிதா பத்மினியின் நடனம் இல்லாத படம் தான் இப்போது கிடையாதே. ஆக அவர்களும் மங்கையற்கரசியின் 'லிஸ்டில்' சேரலாம். ஜிதன் பானர்ஜியும், நாகூரும் டைரக்ட் செய்கின்றனர்.

❀ கிருஷ்ணா பிக்சர்ஸின் கிருஷ்ணபக்தி பல நகரங்களில் சக்கை போடு போட்டுக்கொண்டிருக்கிறது. சின்னப்பாவின் அபார நடிப்பிற்காகவும் பாட்டிற்காகவுமே கொட்டகை நிறைந்து விடுகிறது என்றால் அதில் வியப்பில்லை. பலவிதமான அம்சங்களையும் ஒருங்கே கொண்ட கிருஷ்ணபக்தியில் ஓரிரு மாற்றங்கள் இருந்தால் இன்னும் ரொம்ப ரொம்ப நன்றாக இருக்குமென்றார் ஒரு நண்பர். “அதிகப்படியான நாட்டியம், கச்சேரி முதலியவைகளை எடுத்துவிட்டு சின்னப்பாவிற்கு அதுவும் ராஜ குரு திருந்திய பிறகு அவன் செய்த தீமைகளுக்கு இன்னும் கஷ்டப்படுவதாக கதையைக் கொண்டுபோயிருந்தால் தரமாக இருந்திருக்கும். நடனம், வஸந்தகுமாரி கச்சேரி இதெல்லாம் அதிகப்படி என்று சொல்ல இடமிருந்திருக்காது. கதை இன்னும் அழகுபட்டிருக்கும்” என்றார்.

‘அட போமய்யா. மனிதன் கஷ்டப்படுவதை ரசிக்கும் உமக்கு மென்மை ஹிருதயம் கிடையாதா’ என்று சொல்லி அனுப்பிவைத்தேன். கிருஷ்ணா பிக்சர்ஸார் தங்கள் அடுத்த படம் ஒரு சமூகப் படமாக இருக்கும் என்று அறிவிக்கிறார்கள்.

❀ **மதுரைவீரன்** கதை பழையதுதான். ஆனால் அதை மறுபடி எடுக்கும் முயற்சியில் முதன் முதலில் நவீனா பிக்சர்ஸார் இறங்கி டைரக்டர் சுப்ரமணியத்தின் ஆதரவில் ஆரம்ப விழா வைபவமும் நடந்தேறியது. இப்போது அதைப்பற்றி சினிமா உலகமே மறந்துவிட்டதாக எண்ணினோம். ஆனால் இப்போது அதே மதுரைவீரனை பிரபலமான 4 கம்பெனிக்காரர்களும் தயாரிக்க யோசித்து வருகிறார்களாம்.

முன்பு மதுரை வீரன் படத்துக்கு ‘சின்னப்பா’வின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டது ஞாபகமிருக்கலாம். இப்போது யோசனை செய்து வரும் 4 கம்பெனிகளில் யார் வெற்றிகரமாக படத்தை எடுத்து முடிக்கும் பெருமையை அடையப்போகிறார்களோ? எந்த நட்சத்திரத்துக்கு மதுரைவீரன் படத்தில் நடிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப்போகிறதோ பார்க்கலாம்!

❀ எனெஸ்கே பிலிம்சாரின் இரண்டாவது தயாரிப்பான **நல்லதம்பி** பல ஊர்களில் நல்ல பெயர் எடுத்து வருவதாகத் தெரிகிறது. பானுமதியின் உருவமும் நடிப்பும் போற்றத்தக்கபடி அமைந்திருக்கிறதாம். கிருஷ்ணன் மதுரத்தின் நடிப்பைப் பற்றி வாசகர்களுக்குச் சொல்லவா வேண்டும். சகஸ்ரநாமம் பிரமாதமாக நடித்திருக்கிறாராம். கருத்துக்கள் கொண்டதொரு நல்ல படமாம் நல்லதம்பி. கதை அண்ணாத்துரை பாருங்கள்!

❀ அஜீத் பிக்சர்ஸாரின் **“என் கணவர்”** என்ற படம் திரையிடப்பட்டு விட்டது. ‘இது நிஜமா’ என்ற அழகிய படத்தைத் தயாரித்துப் புகழ் பெற்ற பாலசந்தர்தான் இப்படத்தின் சிருஷ்டிகர்த்தா. மேல் நாட்டு போலி நாகரீகம் புகுந்து நம் சமூகத்தைச் சீர்குலைத்து வருவதையும் இந்தியப் பெண் திலகங்களின் பெருமையையும் சித்தரிக்கும் உணர்ச்சிமிக்க கதைப் போக்கைக் கொண்ட என் கணவரில் பால சந்தர், நந்தினி, செல்லம் முதலியோர் தோன்றுகின்றனர் டைரக்ஷன் பாலசந்தரேதான்.

❀ தமிழில் தயாரித்த சந்திரலேகா ஹிந்தியில் பிரமாத வெற்றியுடன் வெளிவந்தாயிற்று. இனி அதே சந்திரலேகாவை ஆங்கிலத்தில் அமோக வெற்றியுடன் தயாரிக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. **ஆங்கிலத்தில் சந்திரலேகா வெளி**வந்தால் அது வியப்புக்குரிய விஷயமல்ல.

❀ ஜெமினியில் **ஔவையார்** வயோதிகத்தை அடைந்துவிட்டாராம். சுப்பு சுந்தரியாய் ஹாஸ்யம் இதில் சிறந்த அம்சமாம். ஜெமினியார் அடுத்தபடி **காந்திமதி** என்ற ஒரு சமூகப் படத்தைத் தயாரிக்கலாமென்று தெரிகிறது.

❀ ஏ. வி. எம். தமது அடுத்த படமான ‘**வீர்**’யின் விஷயத்தில் அதிக கவனம் செலுத்துவதாகத் தெரிகிறது. காளி ரத்னம், சாரங்கபாணி, ராமச்சந்திரன், சகஸ்ரநாமம், பி. எஸ். சரோஜா முதலியோர் நடிக்கும் இதற்கு ப. நீலகண்டன் தான் கதை வசனம் என்று தெரிகிறது.

❀ வாஹினியின் தமிழ்ப்படமான **லாவண்யா**வில் குமாரி கமலா நடிக்கும் சில பாகங்கள் சென்ற வாரம் படமாக்கப்பட்டதாம். இப்படத்தில் பட்டம்மாள், பெரியநாயகியின் குரல்களைக் கேட்கலாம்.

❀ **கும்மரி மோல்லா** என்ற மங்கை தெலுங்கில் ராமாயணத்தைப் பாடியுள்ளாராம். அத்தகைய பாகவத சிரோன்மணியின் கதையை நாகையா டைரக் செய்வதோடு தானே தந்தையாகவும் ரேணுகா பிலிம்சாருக்காக நடிக்கிறாராம்.

❀ டி. ஆர். மகாலிங்கமும் டி. ஆர். ராஜகுமாரியும் பிரதான நடிகர்களாகத் தோன்றினால் எப்படி இருக்கும் என்று கனவு கண்டுகொண்டிருந்த ரசிகர்களை நினைவு உலகிற்குக் கொண்டுவர **இதய கீதம்** என்ற படத்தின் மூலம் சிடாடல் பிலிம்சார் திட்டமிட்டிருக்கின்றனர். ஜோசப் தளியத்தின் டைரக்ஷனில் இது நியூடோனில் வளருமென்று தெரிகிறது.

❀ **புல்—புலியான்.** இது ஒரு தமிழ்ப் படத்தின் பெயர் மினர்வா பிக்சர்ஸார் தயாரிக்கப் போகின்றனர். டி. ஆர், மகாலிங்கம் தோன்றும் இதற்கு கதை வசனம் இளங்கோவனும், பாட்டுக்களைக் கம்பதாஸனும். டைரக்ஷன் பொறுப்பை ‘முருகதாஸா’வும் ஏற்றுக் கொண்டு வாஹினியிஸ்டுடியோவில் வளர்க்கப்போவதாகத் தெரிகிறது.

பாத்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்கு
சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும் சிறந்த மருந்து.
58 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக் கொடிய
குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றி வருவதனால் டாக்டர்கள்
இச் சஞ்சீவினியையே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.
போலி மருந்துகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

டாக்டர் பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்—4.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

அதிர்ஷ்ட அவதாரம்

"கஜமுகன்"

"இப்பொழுது ஊருக்கு வர வேண்டாம். இன்னும் சில மாதங்களில் சீமந்த கல்யாணத்துக்காக வரும்படியாக இருக்கும்........"

இந்த வரிகளைப் படித்தவுடன் கடம்பவனத்துக்கு தூக்கிவாரிப் போட்டது. முற்றிலும் எதிர்பாராத செய்தி. தந்தையின் ஸ்தானம், தற்போதைய சொற்ப சம்பாத்திய நிலையில் கிட்டுவதை அவன் விரும்பவில்லை மைத்துனியின் கல்யாணத்துக்காக ஜானத்தை ஊருக்கு அனுப்பினான். "இந்த சாக்கில அவள் இரண்டுமாதம் பெற்றோருடன் இருக்கட்டும் அதன் பிறகு லீவு எடுத்துக்கொண்டு போய் அவளை அழைத்துவரலாம்" என்று எண்ணிக்கொண்டிருந்தான்.

அந்த இரண்டு மாதங்கள் சென்று, லீவில் ஊருக்குப் பயணமாக ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் சமயத்தில் தான் ராக்கட் குண்டுபோல் அக் கடிதம் வந்தது.

கடம்பவனத்துக்கு மணமாகி ஒரு வருஷம் பூர்த்தியாகிவிட்டது. வருஷவிழாவைக்கூட சிறப்பாகக் கொண்டாடினான். அப்படிக் கொண்டாடிய முகூர்த்தம்தானே என்னவோ விருந்தினர் வாழ்த்தியது பலித்து விட்டது!

கடம்பவனம் குழந்தை வேண்டாமென்று கூறியதற்குக் காரணம் பொருளாதார நிலைதான். குழந்தையை நன்கு சம்ரக்ஷிக்க சக்தியிருந்தால் ஒழிய குழந்தை பிறக்கக்கூடாது, பெறக்கூடாது என்ற கோட்பாடுடையவன். அவனுடைய தற்போதைய வருமானத்தில், மூன்றாவது ஜீவனை பராமரிக்க முடியாது என்று திண்ணமாக நினைத்தான். அரைகுறை காரியங்களில் அவனுக்கு நம்பிக்கை கிடையாது.

"குழந்தை பிறந்தால் என்ன? மரம் வைத்தவன் தண்ணீர் விடுகிறான்" என்ற சம்பிரதாயமான, பசலிப் பேச்சுக்களெல்லாம் அவனுக்கு கட்டோடு பிடிக்காது.

பொருளாதாரத் தாழ்மை நிலை, குழந்தை வளர்ப்பு, கர்ப்பத் தடை சம்பந்தமான பல புஸ்தகங்களை படித்துப் படித்து அவனுடைய மனம், ஒரு குறிப்பிட்ட லக்ஷியப் பாதையில் சென்றுகொண்டிருந்தது. தான் படித்தவைகளை ஜானுவிடம் எத்தனையோ தடவை எடுத்துக் கூறியிருக்கிறான். இருந்தும் பெண் மனம் இதையெல்லாம் ஏற்க மறுத்துவிட்டது. குழந்தையை அணைத்து சீராட்ட தாய்மை உணர்ச்சி மேலோங்கி நின்றது. குடும்பத்தின் பொருளாதார கட்டுக்கோப்பை அவள் ஆசை உள்ளம் சிந்திக்கவில்லை. தாயாகத் துடித்தாள். அந்த துடிப்புக்கு அணை போட கடம்பவனம் எவ்வளவோ முயற்சித்தான். அது ஒரு வருஷ காலம்தான் முடிந்தது. ஜானு வெற்றிபெற்றாள். அவள் ஆசைக் கனவு நனவாகப் பரிணமிக்கப் போகிறது! அன்னையின் ஆனந்தத்தை அடையப் போகிறாள்.

மனைவியை ஊருக்கு அனுப்பியது பிசகு என்று கடம்பவனம் நினைத்தான். அவளுடன் இருந்தால் மட்டுமென்ன? தெய்வ சித்தத்தை அவனால் தடுத்துவிட முடியுமா? புஸ்தகப் படிப்பு, அறிவு அது ஸாத்தியம் என்றுதான் எண்ணத் தூண்டியது!

—2—

சீமந்தக் கல்யாணத்துக்கு ஊருக்குப் போனான். மாமனார் வீட்டில் மலர்ந்த முகத்துடன் வரவேற்றார்கள். ஜானு அவனை எக்களிப்புடன் பார்த்தாள். அவளுடைய முகத்தில் இப்போது தனி சோபை இலங்கியது.

கடம்பவனம் ஸ்வபாவமாக இல்லை. மாமனார் வீட்டாரின் குதூகலத்தை அவன் ரஸிக்கவில்லை. "இந்த உலகில் அவதிப்பட மற்றொரு ஜீவன் உதயமாகப்போவதை நினைத்து இவ்வளவு சந்தோஷப்பட வேண்டுமா? என்ன அறியாமை!" என்று தனக்குள் சொல்லி சலித்துக் கொண்டான்.

ஜானு அவனை தனியாக சந்தித்தபோது "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஒரு மாதிரியாகவா இருக்கிறேன்? பலமாதிரியாக இல்லை!"

"இது என்ன இப்படிப் பேசுகிறீர்கள்?

"பின் எப்படிப் பேச வேண்டும்?"

அவனுடைய குரலில் எப்போதுமில்லாத கடுமை தென்பட்டதைக்கண்டு அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"நீ ஏன் எனக்கு முதல் மாஸமே எழுதவில்லை?" என்று கேட்டான்.

"எப்ப எழுதினால் என்ன என்றுதான் இருந்தேன். முதலில் எழுதுவதற்கு வெட்கமாக இருந்தது......"

"ஓஹோ........!" என்று பரிகாசமாகச் சிரித்தான்.

"அப்படி முதல் மாஸம் எழுதியிருந்தாலோ?"

"எழுதியிருந்தால் இந்த சீமந்தக் கல்யாணம் நடந்திருக்காது......" என்றான் ஆத்திரத்துடன்.

"என்ன......?" உள்ளம் நடுநடுங்க உடல் சிலிர்க்க, அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

"உங்களுக்கு குழந்தை பிறப்பதில் சந்தோஷமில்லையா? நமது அன்புக்கு ஒரு அடையாளம் வேண்டாமா? ஊர்க் குழந்தைகளுடன் கொஞ்சுகிறீர்களே! நமக்கு என்று பிறக்கும்போது அதை ஏன் விரும்பவில்லை?" என்று படபடப்புடன் கேட்டாள்.

"ஜானு! உனக்கு இதுபற்றி எவ்வளவோ தடவை பாடம் படித்தாய்விட்டது. குழந்தை வேண்டுமென்று ஆசைப்படுகிறாயேதவிர, அதை நன்றாக வளர்க்க முடியுமா என்பதைப் பற்றி நீ யோசிக்கவே இல்லை. நமக்கு வருகிற சம்பளத்தில் குழந்தைக்கு பால்கூட வாங்கிக் கொடுக்க முடியாதே. போஷணக் குறைவினால் வியாதி வெக்கைவந்தால் அதற்கு வைத்தியம் செய்ய நம்மிடம் பணமிருக்கிறதா?

"எனக்குமட்டும் குழந்தை பிடம் ஆசையில்லையா? நீ குழந்தை வேண்டுமென்று விரும்புகிறாய். நான் அதை எப்படி வளர்ப்பது என்று கவலைப் படுகிறேன்." அவன் சாந்தமாகவே பேசினான்.

ஜானு இந்த வாதத்தை எவ்வளவோ தடவை கேட்டிருக்கிறாள். இருந்தபோதிலும் குழந்தை ஜனனம் நிச்சயம் என்று தெரிந்தும் அம்மாதிரி தரித்திரப் பாட்டு பாடுவது அவளுக்குப் பிடிக்கவில்லை.

"வீணாக கவலைப்பட்டால் என்ன பிரயோசனம்? குழந்தை பிறக்கும்வேளை நல்ல வேளையாக இருந்து உங்களுக்கு வேலையில் உயர்வு ஏற்படக்கூடாதா? நமக்கு அதிகப் பணம் வருகிற வரையில் காலம் காத்துக் கொண்டிருக்குமா? அது அது நடக்க வேண்டிய காலத்தில் நடப்பது தான் கிரமம். ஆசைக்கொரு குழந்தை இருந்தால்தான் குடும்பம் களை கட்டியிருக்கும். ஒரு குழந்தையினால் பிரமாதமாகச் செலவாகும் என்று சொல்வது அழகாயில்லை" என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை.

—3—

ஜானுவுக்கு உரிய காலத்தில் ஆண்மகவு பிறந்தது. கணவன் மனப்போக்கு எப்படி இருந்தபோதிலும், அவளுக்கு தாய்மை அடைந்த பெருமை கொஞ்சநஞ்சமல்ல. குழந்தையின் அழகைக் கண்டு பூரித்துப்போனாள். "பணமிருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? இந்த குழந்தைச் செல்வத்துக்கு ஒன்றுமே ஈடாகாது" என்று அவள் எண்ணினாள்.

"கடம்பவனம், கைகொடப்பா, கன்கிராசுலேஷன்ஸ்" என்று நண்பர்கள் வந்து கூறியபோது கடம்பவனம் திகைத்தான். தனக்கு குழந்தை பிறந்த சமாச்சாரம் இவர்களுக்கு எப்படித் தெரிந்தது என்று ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்தான்.

"என்னப்பா முழிக்கிறே! இன்னம் ஆர்டர் வரவில்லையா?" என்றான் ஒரு நண்பன்.

"ஆர்டரா?"

"ஆமாம். உன்னை மதுரையில் நம்ப கம்பெனியின் மானேஜராக நியமித்திருக்கிறார்கள்."

அவனால் நம்பவே முடியவில்லை.

புண்ணியா வாசனத்துக்கு மாமனார் வீட்டுக்குப்போனபோது முற்றிலும் புது மனிதனாகச் சென்றான். குழந்தையை பார்த்துப் பார்த்து மகிழ்ந்தான்! அவன் அதிர்ஷ்ட அவதாரமல்லவா அக் குழந்தை?

Shivaji 20—2—49

தந்தி விலாசம் :—'கோகுல்'
போன் நெ. 57

Estd. 1909
Branch : MANNARGUDI

கும்பகோணம்

டி. எஸ். ஆர்.

கம்பெனியின்

சந்தனாதித் தைலம், கோகுல் பாக்குப்பொட்டலம், அரைக்கீரைவிதைத் தைலம், கோகுல் வத்தி தினுசுகள் இவைகளை உபயோகியுங்கள்.

கோகுல்
கூந்தல் தைலம்

☞ தைலங்கள் கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றன.

எங்கள் ஆலிலை கிருஷ்ணன் டிரேட்மார்க்கை கவனித்து வாங்குங்கள்.

சென்னை நகரத்திற்கு சோல் ஏஜண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

கோவை ஏஜண்டு :—
B. பாலபட்டாபி செட்டியார்,
246, வைசியாள்தெரு, கோயம்புத்தூர்.

ரேகை சாத்திரம்

புத்தி ரேகை

"சிவதாஸன்"

ஆயுள் ரேகைக்கு அடுத்தபடியாக கவனிக்கவேண்டியது புத்தி ரேகை. இதை "மாத்ரு" (தாய்) ரேகை என்று அழைக்கிறார்கள். குழந்தைக்கு தாய் எவ்வளவு முக்கியமோ அதுபோல் ஒருவரின் வாழ்க்கைக்கு மூளை அமைய வேண்டும் மூளையின் அமைப்பையும், பிற்காலத்தில் நடக்கப் போவதையும் புத்தி ரேகை காட்டுகிறது. புத்தி ரேகையில் காணப்படும் ஒவ்வொரு குற்றங் குறைகளும் ஆயுளை நேரிடையாக பாதிக்கிறது. மன அமைப்பு சரியாக இல்லாவிடில் உலகில் பிரவர்த்தியில் செல்வாக்கு இல்லாமல் காலப் போக்கில் அகால மரணத்தை அடைகிறார்கள். மனதிற்கு அதிகப்படியான உற்சாகமும், திடுக்கிடும்படியான சந்தர்ப்பங்களும் கொடுக்கக் கூடாது. இவைகள் மூளையை பலவீனப்படுத்தி விடுகிறது.

புத்தி ரேகை குரு மேட்டுக்கு சமீபமாகவோ, அல்லது குரு மேட்டிலோ, ஆயுள் ரேகையுடன் சேர்ந்தோ, தனித்தோ ஆரம்பமாகி கையின் கடைசி வரைச் செல்லுகிறது. புத்தி ரேகை தடங்கலில்லாமல், இறுதியில் சற்று கூர்மையாக மேல் நோக்கி புதன் மேட்டை நோக்கி முடிவது மிகவும் விசேடம். திடமான மனதையும், நுட்பமான ஞாபக சக்தியையும் காட்டுகிறது. வாழ்க்கையில் எவ்வித கஷ்டங்களும் இவர்க்கு மனக்கலக்கத்தை கொடுப்பதில்லை. உயர்ந்த பதவிகளை வகிப்போருக்கும், முற்றும் துறந்த ஞானிகளுக்கும் புத்தி ரேகை மிகவும் ஒழுங்காக அமைந்திருக்கும்.

ஆண்களுக்கு வலது கையையும், பெண்களுக்கு இடது கையையும் பார்க்கவேண்டுமென்று இருந்தாலும், இரண்டு கைகளையும் நன்கு பரிசோதிக்க வேண்டும். பிறகு ஆண்களுக்கு வலது கையை ஸ்திரமாக வைத்துக்கொண்டு இடது கையை நிச்சயப்படுத்துவதற்கும் அதுபோல் பெண்களுக்கு இடது கையை ஸ்திரமாக வைத்துக்கொண்டு வலது கையை பலன்களை நிச்சயப்படுத்துவதற்கும் ஏற்கவேண்டும் பின்னால் கூறப்படும் விஷயங்கள் வாழ்க்கையை அதிகம் பாதிக்கக் கூடியவைகளாக இருப்பதால் இந்த குறிப்பைத் தருகிறேன்.

புத்தி ரேகை வில்லைப் போல் வளைந்து, சந்திர மேட்டுக்கு கடைசி வரை செல்வதுண்டு. இதன் இறுதியில் நட்சத்திரம், கிராசான குறி காணப்பட்டால் கண்டிப்பாக இவர்களை உன்மத்தர்களாக்கிவிடும். புத்தி ரேகை சிறு ரேகையாக காணப்பட்டால் மந்த புத்தியையும், தரித்திர தன்மையையும் காட்டுகிறது. இந்த குறுகின புத்தி ரேகையின் கடைசியில் நட்சத்திர குறி இருந்தால் அந்தக் கால அளவில் எதிர்பாராத விதமாக மூளை அதிர்ச்சி ஏற்பட்டு மரணமடைவார்கள். புத்தி ரேகை பாதி தூரம் சரிவாச் சென்று பிறகு ஒடிந்த பாவனையாகக் காணப்பட்டு சந்திர மேட்டில் கலந்துவிடும். இதுவும் அந்தக்கால அளவில் ஏற்பட விருக்கும் மனக்கலக்கத்தைக் கொடுக்கும். புத்தி ரேகை மெல்லியதாகக் காணப்படுவதும், சங்கிலிபோலக் காணப்படுவதும், சஞ்சல புத்தியையும், மனச் சோர்வையும் காட்டுகிறது. அற்ப விஷயங்களிலும் மனம் கலங்கிவிடுவார்கள். இவர்களுக்கு அடிக்கடி தலைவலி உண்டாவதையும் காணலாம். அடுத்தபடியாக மிகவும் கடுமையாகக் காணப்படுவது புத்தி ரேகை துண்டுபட்டிருப்பது. புத்தி ரேகை இரண்டு கைகளிலும் சனி மேட்டுக்கு நேராக துண்டுபட்டு ஆயுள் ரேகையும் அந்தக்கால அளவில் சரியாக அமையாமல், சுக்ர ஒளி ரேகை குறுக்கிடுமானால் திடீரென மரணம் சம்பவிக்கும். சூரிய மேட்டுக்கு நேராக துண்டுபட்டிருந்தால் மிருகங்களால் காயமுண்டாகும் என்பது.

புத்தி ரேகையில் கிளைகள் காணப்படுவதுண்டு. மேல் நோக்கிய கிளைகள் நல்ல பலன்களை கொடுக்கும். கிளை குரு மேட்டுக்குச் சென்றால் பெருத்த அதிர்ஷ்டம். ஆனாலும் இது சூலத்துடன் முடியுமானால் விபரீதமாக கஷ்டத்தை உண்டாக்கும். புத்தி ரேகையின் கிளை சூரிய மேட்டுக்குச் செல்லுமாயின் அபார கீர்த்தியைக் காட்டுகிறது கிளை புதன் மேட்டுக்குச் செல்லுமானால் தொழிலில் பெருத்த லாபத்தை காட்டுகிறது. புத்தி ரேகை உற்பத்தியில் மூன்று கிளைகளுடன் காணப்பட்டால் அவர் பரம்பரையாக செல்வந்தர் என்று அறிக தவிற, புத்தி ரேகையில் இறுதியும் கவனிக்கத்தக்கது. இரண்டு கிளைகளாக பிரிந்து மேலும், கீழுமாகச் சென்றால் இவர்கள் எப்பொழுதும் பொய்யராகவே காணப்படுவர்கள். மேல் நோக்கின கிளை, கிளையின் முனை புதன் மேட்டை நாடியிருந்தால் இப்படி இருக்க மாட்டார்கள். சிறந்த தெய்வபக்தியைப் பார்க்கலாம். சிலருக்கு மூன்று கிளைகளுடன் காணப்படும் இது மிகவும் விசேடம்; கீழ் சந்திரன், நடு செவ்வாய், மேல் புதன் ஆகிய மூன்று கிரகங்களின் நல்ல குணங்களை அடைவார்கள்.

ஒருவரின் வாழ்க்கையை உயர்க்க நிலைக்கும், சீர் கேடான வழிக்கும் இழுத்துச் செல்வது மனம். புத்தி ரேகையைக் கண்டு ஒருவர் எத்தகைய புத்தியுடையர் என்று நிச்சயமாக கூறமுடியும்.

துறையூர் டி. மு. கோர்ட்
O. S. 473/1948

வாதிகள் :- வெங்கடாசல கவுண்டர் வகையரா.

பிரதிவாதிகள் :- மருதைமுத்து ராசா வகையரா.

வாதிகள் 2-ம் பிரதிவாதியின் Creditorsக்கு பிரதிநிதியாகதாவா தடர்ந்து S. C. 457/46 E. A. 330/47 ல் ஏற்பட்ட Summary order ஐ ரத்து செய்ய தாவா தடரப்பட்டு ஷை மனு ஈரங்கி 28—2—49உ யில் போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபணையுள்ளவர்கள் அன்று தெரிவித்துக் கொள்ளலாம்.

K. Sivaramakrishna Iyer.
வாதிகள் வக்கில்

துறையூர் 12—2—49

துறையூர் டி. மு. கோர்ட்
O. P. 2/1949

மனுதார் :- லா. தா. ஓமாந்தூர், P. S. மோகிதீன்மதார் சாயபு மகன் P. S. M. பக்கிர் முகம்மது சாயபு.

இதனால் எல்லோருக்கும் தெரிவிப்பதாவது.

மனுதாரின் சகோதரன் இறந்துபோன M. மீராசாயபுக்கு மதுரை ஜில்லாபோர்டிலிருந்து வரவேண்டிய பிராவிடெண்டு பண்டு தொகை ரூ. 666-5-0 ஐ மனுதார் வசூலிக்க வார்சு சர்ட்டிபிகேட் கொடுக்கவேணுமாய் மனுக்கொடுத்து 7—3—49உ-ல் ஈரங்கி போடப்பட்டிருப்பதால் ஆக்ஷேபணை உள்ளவர்கள் ஷை உ யில் கோர்ட்டில் ஆஜராகி தங்கள் கக்ஷியைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

T. V. ராஜகோபாலய்யர்.
அட்வகேட்

துறையூர். 10—2—49

திருச்சி டி. மு. கோர்ட்
E. P. 404/48 In O. S. 501/30

T. S. சையது முகம்மது —வாதி
அலிமா பீபீ. —13-ம் பிரதிவாதி
ஷை மெம்பர் வாத் கொடுத்த நோட்டீஸ்.

ஷை நம்பரில் ஜப்தி சொத்துக்களின் விலையை நிஷ்கரணை செய்ய வாய்தா 22—2—49உ போட்டிருப்பதால் அன்று ஆஜராகி ஆக்ஷேபனை யிருந்தால் தெரிவித்துக்கொள்ளலாம்.

Sd. K. K. ராமசந்திரய்யர்
வக்கீல்,
14—2—49

வயிற்றுக் கோளாறுகளை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப் படுத்தக் கூடியது. சிறந்த

முப்பு சூரணம்

இந்த சூரணம் 30 வருஷ காலமாய் அனுபோகமுள்ளது. பத்தியம் இடையாது. முப்புவினால் தயாரிப்பு. வயற்றுப்புண் அஜீரணம் மல சிக்கல், வயற்று குமட்டல், வாந்தி, மயக்கம், சாப்பிடுவதற்கு முன்னும் பின்னும் வரும் வயறு நோவுதல் குடல் கொந்தளிப்பு மேக சம்மந்தமான வியாதிகளையும் போக்கும்.

4 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3.

-(தபால் செலவு தனி)-

Dr. R. P. சாரதி,
மகாத்மாகாந்தி சித்த வைத்யசாலை
தர்மாராஜா கோயில் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்

தாம்பூலத்திற்கு
மைதீன் புகையிலை
மேலானது
E. S. MYDEEN & Co.
இ.ஸ். மைதீன்
TRADE MARK
KUMBAKONAM.

சலவைக்கு சிறந்த சோப்

J. 101

பலர் உபயோகித்து சிறந்த பலனை கண்டார்கள்

வெள்ளை, நீலம் — இந்த நிறங்களில் செய்யப்படுகின்றன

ஒவ்வொரு வீட்டிலும் தின கால உபயோகத்திற்கு அவசியம் வேண்டியது.

J. 101-பார் சோப்புகள்

வியாபாரிகளுக்கு தனி சலுகை உண்டு. விவரங்களுக்கு எழுதவும்.

ஜோதி சோப் ஒர்க்ஸ்
கரூர்.

J. 101 மார்க் பார்த்து வாங்கவும்.

டோங்ரேயின் — பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு பிரசித்திபெற்ற டானிக்

சூதகத்தை நிறுத்தியது.

(Tablets) சூதகக் கோளாறுகளை எந்த ... (Tablets) ... விலை ரூ. 4.

(வி. பி. க்கு 12 அணா அதிகப்படி.)

Mrs. P. DEVEE, F.D.S. (S)
Tollygunge, CALCUTTA.
Stockist:—HARRY & SON,
93. ChinaBazaar Rd. MADRAS

Regd. No. M. 3398 SHIVAJI 20—2—49 Estd. 1935

விந்தை உலகம் 'மூர்த்தி'

சிகப்புக்குத் தடை

பனிரண்டாம் நூற்றாண்டில் டென்மார்க் தேசத்தில் ஒரு விநோதமான விதி இருந்தது. சிகப்பு வர்ணத்தை சாதாரண ஜனங்கள் தங்கள் உடை முதலிய எந்தப் பழக்கத்திலும் உபயோகிக்கக் கூடாது. சிகப்பு வர்ணம் அரசாங்க உரிமையுடையது. அதை அரசரும், உரிமைபெற்ற பிரபுக்களும்தான் உபயோகிக்கலாம்.

ரொம்பப் பொருத்தம்!

சரித்திரம் 'டியூக் ஆப் பர்கண்டி' (Duke of Burgundy) என்பவருக்குத்தகுதியற்ற பெயரைச்சூட்டி இருக்கிறது. 'ரொம்ப நல்லவர் பிலிப்' (Philip the Good) என்பது அவருக்களிக்கப்பட்ட பெயர். ஆனால் இதே பிலிப் 1466-ல் தனக்கு விரோதமாக இருந்த 800 பேரை இரண்டிரண்டு பேராக முதுகோடு முதுகு ஒட்ட கிற்கவைத்துக் கட்டி நதியில் தள்ளி சாகடித்த மகானுபாவர். இத்தகைய உத்தமருக்கு ஏற்ற பெயர்தான்.

புழு பூச்சிகளைத் தின்னும் மனித வர்க்கம்

தேனீ கொடுக்கும் தேன் மெழுகு போன்ற பொருள்களினால் பயனடைவதைத்தவிர அந்தத் தேனீயையே ஸ்வாஹா செய்து விடுவார்களாம் சிங்களவர்கள். தேனீப்புழு என்றால் அவர்களுக்கு குஞ்சாலாடுபோலவாம். வெள்ளை எறும்பு (கரையான் வகை) என்று சொல்லப்படும் ஒருவகை எறும்பு ஆப்பிரிக்காவின் பல பாகங்களில் விலைமிகுந்த உணவுப்பொருளாக விற்கப்படுகிறதாம். அதைப்பச்சையாகவும், வித விதமாகவும் சமைத்துப் சாப்பிடுவார்களாம் ஆப்பிரிக்கர். சிக்காடா (Cicadae) என்ற ஒருவகைப் பூச்சி (நான்கு இறகு கொண்ட பலத்த ரீங்காரம் செய்யும் ஒருவித பூச்சி) ஏராளமாக கிரேக்கர்களால் சாப்பிடப்படுகிறதாம் அதன் சுவையைப்பற்றிப்பல பிரபல எழுத்தாளர்கள் அற்புதமாக வர்ணித்திருக்கிறார்கள்.

ரொம்ப ரொம்ப காலத்துக்கு முன்னால் நத்தைகளை விசேஷ உணவாக உட்கொண்டார்களாம் ரோமானியர். ஹம்போல்ட் (Humboldt) என்ற மேல்நாட்டு எழுத்தாளர் "இந்தியக் குழந்தைகள் பதினெட்டு அங்குல நீளமுள்ள மண் புழுவை பூமியிலிருந்து இழுத்துத் தின்பதாக எழுதி இருக்கிறார்". அது எவ்வளவு தூரம் உண்மை என்று நமக்குத்தெரியாதா?

சைனாக்காரர்கள் பட்டுப்பூச்சிகளைத் தின்பதில் பலே சூரர்களாம் பட்டுக்கூட்டை உடைத்துக்கொண்டு பறந்து போகும் பூச்சிகளைப்பிடித்து அதை நெய்யில் பொறித்து முட்டைகளை உடைத்து அத்துடன் போட்டு மிளகுதூள் கலந்து உப்பும்போட்டுத்தான் பக்குவப்படுத்திச் சாப்பிடுவார்களாம்.

ஜாக்சன் என்ற ஆங்கிலேயப் பிரயாணி எழுதி இருக்கிறார் 1799-ல் அவர் சுற்றுப் பிரயாணத்தின்போது பார்பர் என்ற இடத்தில் ஆகாரங்களோடு வெட்டுக்கிளி வறுவல் பரிமாறப்பட்டதாம். இந்த வறுவல் கௌரவமுள்ள ஆகாரமாம். அங்குள்ள ஒவ்வொரு மனிதனும் இந்த வெட்டுக்கிளி (தத்துக்கிளி) உணவை சர்வசாதாரணமாக ஒருவித கஷ்டமின்றி 300 பிளேட்டுகள் வரை குதூகலத்துடன் சாப்பிடுகிறார்களாம்.

இப்படிப் புழு பூச்சிகளைச் சாப்பிடும் மனிதவர்க்கம் எவ்வளவோ இருக்கிறது.

12,000 வருஷத்து உணவு

உலகயுத்தத்துக்கு முன்னால் ஸெண்ட் பீடர்ஸ்பர்க்கிலுள்ள, இம்பீரியல் அகடமி ஆப் சயின்ஸ் காரியாலயத்து மெம்பர்கள் 8000 மைல்களுக்கப்பாலுள்ள நியூ சைபீரியாவிலிருந்து 12,000 வருஷங்களுக்கு முன்பு வாழ்ந்த யானையின் (மாமத்) இறைச்சியை வெட்டிக்கொண்டுவந்து சமைத்துச்சாப்பிட்டார்களாம். இந்த யானையின் உடல் பனிக்கட்டிகளுக்கு இடையில் அத்தனைவருஷமாகக் கெட்டுப்போகாமல் இருந்ததாம். அந்த யானையின் உருவத்திலிருந்தும், அமைப்பிலிருந்தும் உலகம் தோன்றிய காலத்திலிருந்து ஜீவராசிகளைப்பற்றிய வரலாறு ஆராயப்படுகிறது.

ஒரு முத்தத்துக்கு 12,000 பவுன்

1915-ம் வருஷம் லண்டனிலுள்ள ஆல்பர்ட் ஹாலில் ஒரு பிரபல நடிகை தன் ஒரு முத்தத்தை தர்மச்செலவுக்காக ஏலத்துக்கு விட்டாள். அவளிடமிருந்து ஒரு முத்தத்தைப் பெற 8000 பவுனிலிருந்து ஏலம் ஆரம்பிக்கப்பட்டது. கடைசியில் டியூக் ஆப் அல்பேன்ஸ் அம்முத்தத்துக்கு 12,000 பவுன் ஏலம் கேட்டாராம். அவருக்கே ஏலம் விடப்பட்டது. ஆனால் அவர் என்ன தெரியுமா செய்தார். அந்த நடிகையை அவர் அணைத்து முத்தமிடுவாரென்று எல்லோரும் எண்ணியிருக்க அந்த எமகாதகப்பேர்வழி தன் 9 வயது மகனைத்தூக்கி அந்தக்குழந்தையிடம் அவள் முத்தத்தைப்பதிக்கும்படி அவள் முன் நீட்டினாரே பார்க்கலாம்!

சம்பளம்

லண்டனிலுள்ள ஸெண்ட் பால்ஸ் கதீட்ரலில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் உபதேசம் செய்யும் மதகுருவுக்கு ஒரு ஒயின்பாட்டில் அவர் சம்பளத்தின் ஒரு பகுதியாக அளிக்கப்படுகிறதாம். நகர கார்பரேஷனின் செலவில் பலவருஷங்களாக நிறைவேற்றப்பட்டு வருகிறதாம் இப்பழக்கம்.

Printed at Trichinopoly United Printers Limited., Trichinopoly, and Published by Thiruloka-Sitharam (Editor).

சத்ரபதி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"நீங்கள் மூத்த சகோதரனுக்குச் செய்த துரோகத்தை விடவா இது பெரிது?" என்று மடக்கினான் சிவாஜி. அவர்கள் உறுமினர்.

கோட்டைக்குள் அவ்விருவரையும் அழைத்துச் சென்று ஆசுவாசப்படுத்தி, அவர்களால் தன்னை இனி யாதொன்றும் செய்ய முடியாதென்று கூறி அயரவைத்தான், முதலில். பின்னர் மூத்தவனையும் விடுவித்து மூவருக்கும் சூழ்புறத்தே எங்கோ இருந்த சிறு நிலப் பகுதிகள் கொடுத்து, திருப்தி செய்வித்து விரட்டிவிட்டான்.

சிவாஜியின் வீரர்களால் தோற்கடிக்கப்பட்டிருந்த புரந்தர் கோட்டை பீஜபுரி ராணுவத்தினர் சிவாஜியின் ராணுவத்தில் சேவை செய்யச் சித்தமாயிருந்தனர். சிவாஜியிடம் அவர்களுக்கு நிறையக் கவர்ச்சி தோன்றியிருந்தது.

புரந்தர் கோட்டையை இவ்வாறு சிவாஜி ஆக்கிரமித்த செய்தியும்பீஜபுரிக்கு எட்டாமலில்லை. ஆனால் சிவாஜியின் செயல்களின் முழுப்பொருளும் பீஜபுரி சுல்தானுக்கு சிறிதும் விளங்கவேயில்லை. ஏதோ சில்லறைச் சச்சரவு நடப்பதாவே அலட்சியப்படுத்தி வந்தார் சுல்தான். மேலும் சிவாஜி தனது 'பக்தி'யை அடிக்கடி வற்புறுத்தி வந்ததுடன் தனது ராஜவிசுவாசத்தின் எடுத்துக்காட்டாகத் தான் ஆக்கிரமித்து வந்த கோட்டைகளுக்கான வரியை இரண்டு மடங்காகக் கொடுப்பதாகச் சேதியனுப்பினான். லஞ்சம், நிர்வாகச் சிக்கல் இவற்றின் மூலம் வேறு தன் செயல்களுக்குத் தற்காப்புத் தேடிக் கொண்டான்.

பீஜபுரி சுல்தானுக்கு அந்த சமயத்தில் உடல் நலம் குன்றி, உயிருக்கே ஆபத்து வரும்போலிருந்ததால் சிவாஜியைக் கவனிக்க யாருக்கும் அக்கரை பிறக்கவில்லை.

இவ்வாறு பனிரண்டு மாதங்கள் கடப்பதற்குள் சிவாஜி தன் பிராந்தியத்துக் கோட்டைகளுக்கு நாயகனாகி பலமான தென்புறத் தற்காப்பு சமைத்துக்கொண்டு விட்டான்.

●

ஷேக்ஸ்பியர் திருநாள்

இவ்வருட ஷேக்ஸ்பியர் திருநாள் வழக்கம்போல பிரிட்டிஷ் கைத்தொழில் சந்தை நடைபெறும் தேதிகளில்-அதாவது மே 2-உ 13-உவரை நாடகாசிரியர் பிறந்தஸ்தலமான ஸ்டிராட்போர்ட் — அப்பான் — ஆவனில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படும். அதுபோது பிரதி இரவும் நாடகங்கள் நடைபெறும். இவ்விழாவிககு வருடந்தோறும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டினர்கள்விஜயம் செய்கின்றனர். பிரிட்டனுக்கு விஜயம்செய்வோர் நாடகாசிரியர் பிறந்த ஊரை சுற்றிப்பார்த்து, குறைந்தது ஒருநாடகமாவது பார்த்தால்தான் பிரிட்டன் விஜயம் பூர்த்தி அடைந்ததாகக் கருதுகின்றனர்.